1472

No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

AUTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள் (MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 10



JL
ஜை211, N24J9
N30'7'10.
210025

ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோட்டித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி அணா 3.

ஏழாவது ஆண்டு ! ஏழாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 7-வது ஆண்டு 1929ஞு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட "**சாருலோசனு**" என்னும் அற்புதமான நாவலின் இரண்டாம்பாகமும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1-8-0 தான். "**சாருலோசனு**" வின் முதல்பாகம் சென்ற வாண்டின் கடைசி நான்கு சஞ்சிகைகளில் வெளிவந்ததால், புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் **எட்டணு** கூடச் சேர்த்து ரூ. **2** அனுப்பினுல், அவற்றை அனுப்புகிருேம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை **வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாகுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் **புதிய நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிருேம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணு ஸ்டாம்பு** அனுப்பினுல்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனுமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்**

மானேஜர்.

16 MAR 193

சுலோசனா:—உறவின் முறையை உரைக்கவும் மனிதரற்ற அனாதை நான் என்பது விளங்கவில்லையா! உம்....பரீக்ஷை தேறுவதும் படிப்பதுந்தான் எனக்குப் பொழுதுபோக்கு. ஆகையால் அதன் கிரமப்படி நடந்தது. இதற்கு எனக்கு ஓர் பெருமையே இல்லை. தங்கள் மனைவி பரிமளா நல்ல அழகுடையவள்தானா?—என்று வார்த்தையைச் சமயோசிதமாக மாற்றிவிட்டாள். இதைக் கேட்ட விமலநாதன் முகத்தை யொருவிதமாக வைத்துக்கொண்டு, “பெற்றவர்களுக்குத் தம் மக்கள் அழகாயிருப்பதும், உண்மையான—தெய்வீகமான, தானே ஜனித்த—கனிந்த காதலுள்ள தம்பதிகள் பரஸ்பரம் அழகாகத் தோன்றுவதும் உலகில் சகஜம். இவ்விரண்டும் இல்லாத இடத்துச் செய்தியைக் கூறக் கேட்பதே கடினம்” என்று கூறிக்கொண்டே வருகையில் இவர்கள் இறங்கவேண்டிய விடுதியின் வாயிலில் வந்து வண்டி நின்றது.

முதலில் விமலநாதன் இறங்கி இருவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்று, தன் தாயின்முன் நிறுத்தி “அம்மா! இதோ சுலோசனாவும், கோபியும். நீங்கள் சொல்லியவாறு கடிதமெழுதினேன்; இவர்கள் வந்தார்கள். இனி இவர்களை ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டுவது உங்கள் கடமை” என்றான்.

மனமோகன சிங்காரவடிவுடன் நிற்கும் சொர்ணபிம்பம் போன்ற சுலோசனாவை விமலநாதனுடைய தாயார் எப்போதோ பால்யத்தில் பார்த்தது; அப்பொழுது நினைவுக்கு வரவில்லை. இப்போது கண்டதும் பிரமித்துவிட்டாள். அங்கு விவாகத்திற்காக வந்திருந்த ஜனங்கள் எல்லோரும் சுலோசனாவைச் சூழ்ந்துகொண்டு வெகு வியப்போடு பார்க்கிறார்கள். விமலநாதனின் தாயார் சுலோசனாவைக் கண்டதும் சகிக்க முடியாத துக்கத்தையடைந்து அவளைக் கட்டிக்கொண்டு விவாக விடென்பதையும் பாராது ‘ஹோ’ வெனக் கதறி, “ஐயோ! இத்தனை ரூபமும் யௌவனமும் பாழாகி

“ஐயோ! என்ன செய்வேன்?” என்று ஏங்கித் தவிக்கும் சமயத்தில் கடவுள் சிறிதும் எதிர்பாராத விதம் உதவிக்கு ஆளை யனுப்பி அவ் வேலையைப் பூர்த்தி யாக்கிவிடுகிறார்; தவித்தவன் மனம் களித்துவிடுகின்றது.

210025

விட்டதே! பாவி சண்டாளி த்வேஷம் பாராட்டி உன்னைப் படுகுழியில் தள்ளிவிட்டாளே! அந்தோ! இதற்கா ஈசன் உன்னை இத்தகைய அற்புத எழிலுடன் சிருஷ்டித்தான். என் வயிறு எரிகின்றதே! ஐயோ! உன்மீது உயிர் வைத்திருந்த ஜானகியுமா மடியவேண்டும். அவள் இருந்தாலும் உன்னை ஆதரிப்பாளே! உன் தலைவிதி இவ்விதமாகவா முடிந்துவிட்டது!' என்று புலம்பினாள்.

அப்போது அங்குக் கூடியிருந்தவர்களுக்கு சுலோசனா யார் என்பது விளங்கிற்று. எல்லோரும் வருத்தப்பட்டார்கள். சுலோசனாவும் கண்ணீர்விட்டாள். பிறகு வெகு பணிவாகப் பேசத்தொடங்கி "பாட்டீ! மகாபாபி என்பொருட்டாகச் சுபகரமான கல்யாண வீட்டில் அழுகுரல் எதற்கு? என் விதியை நோவதைவிட்டுப் பிறரைப் பழிப்பதில் பயனில்லை. என்னுடைய வாழ்வினை இவ்விதம் ஆய்விட்டது. என்னருமைப் பெரியதாயாரின் அன்னையாகத் தாங்கள் இருப்பதை நான் இப்போதேனும் அறிந்தது பெரிய சந்தோஷம். தங்கள் ஜானகியம்மாளின் மகளாக என்னைப் பாவிக்கக் கோருகிறேன்" என்றாள். இந்தக் கண்ணியமானதும் மகா அறிவுள்ளதும், எவர் உணர்ச்சியையும் இளகச்செய்யும் இயல்பினதுமான அம்மொழியைக் கேட்டு எல்லோரும் வியந்தார்கள். பிறகு சுலோசனாவிற்கு நடந்த மரியாதைக் களவில்லை.

விமலநாதனுக்கோ 'இந்த விவாகத்தை நிறுத்திவிடலாமா' என்றும் தோன்றுகின்றது. பிறகு அதனால் தன் தங்கைக்கு அவமானமும், அபகீர்த்தியும், தனக்குப் பொல்லாப் பேரும் கிடைக்குமேயென்ற யோசனை உதித்ததால் அவ்வெண்ணத்தை விட்டான். அன்றிரவு 'ஜானுவாஸம்' முதலிய விவாக பிராரம்ப வைதிக காரியங்கள் சிறப்பாக நடந்தன. மறுதினமே காலையில் முகூர்த்தம். விமலநாதன் விழிகள் மழை பொழிந்துகொண்டே

'இன்று நாம் எதிர்பார்க்கும் பெரியாரின் கடிதம் கிடைக்குமா?' என்று ஏங்கி நிற்கையில் அக் கடிதம் நமது காத்தைத் தாவி வந்துவிடுங்கால் மனம் பூரித்து மகிழுவதைக் கூறவேண்டுமோ! அக் கடிதத்தைத் 'திருப்பித் திருப்பிப் பலதரம் படித்துப் பரவச முறச் செய்கின்றது.

இருக்கின்றன. 'கல்யாண மாப்பிள்ளை ஏன் வருத்தப்படுகிறார்?' என்று எல்லோரும் கசமசவென்று பேசிக்கொள்கிறார்களேயன்றி உண்மையை யாரும் அறியார்கள். பெண்கள் கூட்டத்தின் மத்தியில் நவரத்தினங்களுக்கு இடையில் வைரம் எவ்விதம் சுடர்விட்டுப் பிரகாசிக்குமோ அதுபோல சுலோசனு விளங்கினுள். விமலநாதனுடைய விழிகள் அந்த வைரமணியின்மீது தாவி நிற்பதை அவனுல் கூடுமானவரையில் தடுக்க முயன்றும் முடியவில்லை. அன்பற்ற அக்கலியாணம்—கட்டாயக் கடிமணம் ஒருவாறு முடிந்தது. மாப்பிள்ளை நலங்கிடுவது, செண்டாடுவது முதலிய சடங்குகளை யெல்லாம் செய்ய, விமலநாதன் அடியோடு மறுத்துவிட்டான். தாலி கட்டவேண்டுவதே தனது கடமையென்று எண்ணி அதை முடித்துப்பின்பு விலகிக்கொண்டான். இந்தக் கல்யாணம் நிச்சயமானது முதலாகவே விமலநாதன் தன் தந்தையுடன் சரியாகப் பேசுவதை நிறுத்திக்கொண்டான்.

* * * * *

விவாக மகோத்ஸவம் முடிந்தது. எல்லோரும் தத்தம் ஊரை நோக்கிச் செல்லலானுர்கள். சுலோசனுவும் தான் ஊருக்குப்போக வேண்டுமென்று மெல்லக்கூறினுள். விமலநாதனின் பெற்றோர்கள் எங்களுடன் ஊருக்கு வந்து இரண்டுநாள் இருந்தபிறகுதான் செல்லவேண்டுமென்று தடுத்துவிட்டார்கள். அவர்கள் வார்த்தையைத் தட்டக்கூடாமல் சுலோசனு அதற்கிசைந்தாள். பிறகு அவர்களுடன் ஊருக்குச் சென்றுள். அங்குத் தனது தந்தையுடையதும், பெரிய தாயாருடையதும், தன் தாயினதும் தானும் தனது தம்பியும் குழந்தைப் பருவமாக இருந்த காலத்தில் எடுத்ததுமாகிய பல புகைப்படங்கள் சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டு "ஆகா! என்னை இந்தப்படத்திலிருப்பதுபோலச் சிறு பெண்ணுகவே ஏன் கடவுள் வைக்கவில்லை?" என்று ஏதேதோ யோசித்து வருந்தியவாறு அவ்விடத்திலேயே நின்றுள்.

கடிதத்தில் நமக்கு நற்போதனையைப் புகட்டி வரைந்திருப்பின் அதைப் படிக்குங்கால் அப் பெரியாரை மனதார வணங்கி நிற்க மனம் விரைவில் எழுகின்றது.

6-வது அதிகாரம்

அன்பிற்கடிமை அன்பு—பணத்திற்கடிமை பகைமை

விவாக கார்ரியங்கள் முடிந்தபின்னர், விமலநாதனுடைய தேக வனப்பும் மனோபாவங்களும் முற்றிலும் மாறிப்போய்விட்டன. இந்த நூதனமான மாறுதலை அவன் முகமே, அடுத்தது காட்டும் பளிங்குபோன்று எடுத்துக் காட்டிவிட்டது. அவனுடைய மனதில் ஆழ்ந்து பதிந்து கிடக்கும் அம்மாறுதலின் உண்மைக் காரணங்களை அறிந்தவள் அவன் தாய் ஒருத்தியே யாவள். அவள் யாது செய்வாள் பாவம்! ஜாதி மதக் கட்டுப்பாட்டையும், தமது குடும்ப கௌரவத்தையும், தன் கணவனின் விருப்பத்தையும் உத்தேசித்து வாளாவிருந்துவிட்டாள். அவன் தந்தையோ விவாகமானபின் விமலநாதன் அடைந்துள்ள மாறுதல்களைத் தெளியக்கண்டும், கவனியாமலும் அவற்றைப்பற்றி விசாரியாமலும், வேறு எதும் செய்யாமலும் இருந்துவிட்டார். ஆனால் சுலோசனாவின் மீது அவ்விருவருக்கும் ஒருவிதமான இரக்கமும், கருணையும் தோன்றிவிட்டதால் அவளுடன் தாராளமாகப் பேசவும் பழகவும் தொடங்கினார்கள். சுலோசனாவைத் தம்முடன் கூட சில தினமேனும் வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் ஓர் ஆசையால் அவளைத் தம்முடன் அழைத்துவந்தார்கள். சுலோசனாவுக்குச் செய்யும் தடபுடலான உபசாரத்திற்கோ அளவே இல்லை. சுலோசனாவுக்குமட்டும் மனதில் ஒருவிதமான வியசனமும் சங்கடமும் தோன்றி வதைத்துக்கொண்டே இருந்தது. அவ்வாறிருக்கையில்தான் நாம் முன்னர் தெரிவித்தவாறு அங்குச் சுவரில்

எந்த விஷயங்களை நாம் எழுதிய போதிலும் அததன் அருமையை—ருசியை—அறிந்தவர்களிடத்திலிருந்து, "இது நன்றாக இருக்கிறது," என்ற வாக்கியத்தைப் பெறுவதுதான் **கல்லின்மேல் எழுத்துக்கு நிகராகும்.**

தொங்கவிடப்பட்டிருந்த படங்களையெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பார்த்துக்கொண்டே வருகையில் தன்னுடைய படம் இருப்பதைக் கண்டு மிகவும் துக்கக்கிராந்தையாகி "ஐயோ! இப்பாவி சுலோசனாவா இப்படத்தில் இருப்பது? இதில் இருப்பதுபோலவே எப்போதும் சிறுமிப் பருவத்துடன் இருத்தல்கூடாதா! நான் ஏன் பயனற்ற மரம் வளர்வதுபோல வளரவேண்டும்? எல்லா விஷயத்திலும் விலக்கப்பட்டு, பலவிதத்திலும் இன்னலுக்கு இலக்காகி வருந்திக்கொண்டிருக்கவோ பூமியில் பெண்ணாக ஜனித்தேன். என் பெற்றோர்களின் மத்தியில் நான் நிற்பதுமட்டும் அழியாதிருக்கின்றது. மற்றபடி என்விதி பலவிதத்திலும் அழிந்துவிட்டதே; இவ்விளம் பிராயத்தில் விவாகமானதும், பெற்றோர் அற்றதும், பிறகு வாழ்வே தாழ்வாய்—பாழ்பட்டுப்போய்விட்டதும் என்ன அநியாயம்! இது என் விதி. பாழும் விதியின் வலிமை யாரைவிட்டது?

தாயோ திருமகளாம் தந்தை திருமாலாம்
சேயாகுந்தானோ திறர்படையான்—வீயாத
ஆற்றல் பெறினும் அரன் விழியால் மாய்ந்தானேல்
மாற்றற்காமோ விதியின் மாண்பு. (நவீன கவி மஞ்சரி.)

என்கிற செய்யுளால் சாக்ஷாத் எம்பெருமானையும் பிராட்டியையுங்கூட விதி என்பது விடாது அவர்கள் புத்திர சோகத்தை அடைந்தார்கள் என்றால், கேவலம் சேற்றுப் புழுவிற்குச் சமானமாயுள்ள எனக்கு விதியின் வலிமை வந்துள்ளது ஓர் வியப்பாமா! இல்லை! இல்லை! விதியைத் தடுத்துப் பதம் பெற வல்லார் யாருமிலர். எண்ணிலா கருமத்தைக் கண்மூடித் தனமாகப் பண்ணிவிட்டுப் பெண் ஜன்மமெடுத்து மண்ணில் பிறந்ததன் பயன் யாதெனில் கண்ணீரின் துணையைக் கொண்டதேயன்றி மற்றேதும் கண்டிலேன். இச்சிறிய உருவத்துடனேயே என் காலமும் முடிந்திருப்பின் எத்தகைய மேன்மையை அடைந்திருப்பேன்? என் மனம் எவ்வளவு மகிழ்ச்சியாக விருக்கும். உம். எவ்வழி நோக்கினும் என் விஷயத்

நன்றாகப் பட்டுத் தேறிய பெரியாரின் அனுபவ ஞானம் ஒரு தனித்த சுடர் விளக்கு. அதற்கு நிகர் அதுவே தான். அதை நன்கறிந்தோர்க்கே அதன் உண்மை விளங்கும்.

16 MAR 193

தில் இருள் சூழ்ந்துவிட்டது. மகா கொடிய வேளையில் ஜனித்த பாவி நீ என்று கடவுள் என்னை விலக்கிவிட்டார். என்னரிய தந்தையையும் பிரித்தார். 'பேயானாலும் தாய்' என்பது போன்று எனக்கோர் பெருந் துணையாக இருக்கக் கூடிய தாயையும் பிரித்துத் தனிமரமாக்கிவிட்டார். எல்லா விஷயங்களிலும் என்னை ஆதரிக்கக் கூடிய என் பெரிய அன்னையையும் கடவுள் என் கதியை அலங்கோலப் படுத்தும் பொருட்டுத் தன்னிடம் இழுத்துக்கொண்டார் போலும். ஐயோ! ஒரு திக்கு மற்ற அனாதையாய்ப் பிறந்து விட்டேனே! என்னருமைக் கோபியை யாவது கடவுள் தீர்க்காயுளுடன் வைத்தால் அதுவே எனக்குப் போதுமானது. என் தந்தையே! என்னருமைத் தாயே! உங்களைப் படத்தில் கண்டு களிக்க வேண்டியா என் விதி முடிந்தது! உங்களிருவரின் உதரத்தில் உதித்தும் உதவாப் பண்டமாகி விட்டேனே! எனது அறிவு தெரிந்த நாளில் நான் அனாதையாக நின்றுவிடும்படி என்னைத் தனியே விட்டுப் போய்விட்டீர்களே! என்னுடையபாழும் பிறவியைக் கண்டு சிறிது நேரம் மகிழ்ந்த அம் மகிழ்ச்சியோடு நீங்கள் சென்று விட்டீர்கள். என்னாயுள் பரியந்தம் சகலருடைய வியசனத்தையும் பகிர்ந்து அனுபவிப்பதற்காகவா என்னை நியமித்து விட்டீர்கள். ஐயோ! எனக்கு வயது இன்னும் பதினெட்டு நிரம்பவில்லை. என்னாயுட் காலம் இன்னும் எத்தனை யுகங்கள் இருக்கின்றனவோ! அக்காலத்தை நான் இடரின்றி எவ்விதம் கடத்துவேன்? "கணவனை இழந்தார்க்குக் காட்டு இல்" என்று இதனால்தான் பெரியோர் கூறினரோ! ஒருவன் தந்தையை இழப்பானானால் அவனிடம் துக்கம் விசாரிக்க வந்து தேற்றுகிறவர்கள் "அப்பா! அவர் ஏதோ இறந்து போனார்; இனி, உன் சிற்றப்பன்மார்களைப் பார்த்து மனந் தேறி பிதாஸ்தானத்தில் வைத்துப் போற்று" என்று கூறுவர். இது போலவே, தாய், சகோதர, சகோதரிகளை இழந்தவர்களையும் தேற்ற

அநுபவம்:—என்றால் அ—அறிந்து, நு—நுகர்ந்து, ப—பலமான குட்டுப்பட்டு, வ—வருந்தி, ம்—ம்; இதுதான் நாம் செய்த பாக்கியம்; கடவுளுக்கு நம்மீது உள்ள கருணை இதுதான் என்று மனத்திலடக்கிக்கொண்டு தேறுதலாகும். இதுவே கண்டறிந்த அநுபவமாகும்.

வழி யுண்டு. மனைவியை இழந்தவனைத் தேற்றும்போதும் "அப்பா! அக்கிக்காதே; ஏதோ அவள் விதி முடிந்து வினை அழைக்கச் சென்றாள். இன்னொரு கட்டழகியை நீ விவாகம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்திரு" என்று கூறுவர். ஆனால் கணவனை இழந்தவளை நோக்கி என்ன கூறுவது? அவளுக்கு யாரைக் காட்டி மனதைத் தேற்றுவது? வந்தவர்கள் ஐயோ வென்றலறி யழுகின்றனரே யன்றி, வேறு ஒருவரைக் காட்டி ஆற்ற வழி யுண்டா! மற்றவர்கள் விஷயத்தில் அஸ்தமித்த சூர்யன் உதிப்பான்; வாழ்வில் பிரகாச மென்பதுண்டு. ஆனால் கைம்பெண் விஷயத்தில் விழுந்த ஞாயிறு எழுவதே இல்லை. அந்தோ! இந்த துக்ககரமானவர்களின் வாழ்வினும் கொடியது உலகில் உண்டோ?

மனிதரின் குணா குணங்களை யறியாது பழகுவதன் பயன் என்ன வென்பதை அக்காவேரிச் சனியனின் மூலம் அறிந்தேன். இத்தகைய அற்பர்களுடைய சகவாஸம் ஆபத்தில் சிக்க வைக்கும் என்பதை அனுபவத்தில் கண்டறிந்திருப்பினும், இன்னும் என்னென்ன இம்சைகள் படவேண்டுமோ! யார் யார் மூலம் என்னென்ன ஆபத்துக்கள் நேருமோ! என்று தானாகவே எண்ணியவாறு கண்ணீர் பெருகக் கலங்கிய உள்ளத்துடன் கற்சிலைப் போல உட்கார்ந்திருந்த கட்டழகியை ஆற்றுவாருண்டா! தேற்றுவார் உண்டா!

விமலநாதனின் சொந்தமான ஊர் தென் தேசத்திலுள்ளது. அவனுடைய பிதா உத்தியோக நிமித்தம் பல ஊர்களுக்குச் சென்று திரும்பும்படியாக இருந்தது. விமலநாதனுக்குப் படிப்பின் காரணத்தை முன்னிட்டுச் சென்னையிலேயே இருக்கும்படியான சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. விமலநாதனின் பிதா மட்டும் வெளியூர்களில் இருப்பதும் இவ்விடம் வருவதுமாக இருக்கலானார். சென்னையைச் சார்ந்த பூந்தமல்லி ஹைரோட்டில் "ஆனந்த விலாசம்"

நாம் ஏதோ விஷயங்களினால் கவலையுற்றிருக்கும் தருணத்தில் நமக்கு மிகவும் வேண்டியவர்களிட மிருந்து கடிதம் வந்தால் அக் கடிதம் பெற்ற ஆனந்தத்தினால் நாம் முன்னர் அடைந்த துன்பங்கள் உடனே மறையும்படியான ஆறுதலும் ஆனந்தமும் உண்டாகி விடுகின்றன.

என்றொரு அழகிய பெரிய பங்களாவில் அவர்கள் முதலில் குடித்தன மாக வந்தார்கள். பிறகு அந்தப் பங்களாவைச் சொந்தமாக வாங்கிக் கொண்டார்கள். அந்தப் பங்களாவைவர்ணிப்பது எம்போன்றவர்க்கு எளிதல்ல. பங்களாவைச் சுற்றியுள்ள பெரிய தோட்டத்தின் நாற் புறங்களிலும் அழகிய 'கம்பவுண்ட்' சுவர் ஓர் ஆள் உயரம் எடுக்கப்பட்டு இருக்கின்றது. அதன் முன் பக்கத்து 'கேட்' ஓர் விசித்திரமான வேலைப்பாடுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. அக் கேட்டின் மேற்புறத்தில் பலவிதமான வர்ணப் புஷ்பங்களின் கொடி களைப் படர விட்டு 'கமான்' வளைத்தது போல வளைவு செய்து அவ் வளைவின் மேல் பாகத்தில் அநேக விதமான நிறங்களையுடைய பல்புகள் (Bulbs) பதித்து "ஆனந்த விலாசம்" என்ற எழுத்துக்கள் போல அமைத்திருக்கும் அற்புதம் காண்போர் மனத்தைக் காந்தம் போல இழுக்கும் சக்தி வாய்ந்திருக்கின்றது. அத்தகைய அருமை யான ஆனந்த விலாசத்தின் தோட்டத்தில் எண்ணிறந்த நானாவித மான இங்கிலீஷ் 'க்ரோடன்ஸ்'களும், நறுமணம் எப்பொழுதும் வீசிக்கொண்டிருக்கும் பலவித மலர்ச் செடிகளும், விதவிதமான கலர்களினுலாகிய புஷ்பச்செடிகளும், அத் தோட்டத்தில் ஆங்காங்கு பதிக்கப்பட்டிருக்கும் பளிங்காசனங்களும், அழகிய சிலைகளும் குடை கவித்தவாறு அநேக பெரிய விருக்ஷங்களும் வெகு ரமணீகர மாக விளங்குகின்றன. இக்காலத்தின் நாகரிகத்திற்கேற்ப அவ்வழ கிய தோட்டத்தில் மேலே படர்ந்திருக்கும் 'க்ரோட்டன்ஸ்' வகைகள் வெல்கம் (welcome) என்ற எழுத்துக்கள் போல அமைத்துக் கத்தரித்துப் பார்ப்பதற்கு வெகு அற்புதமாகச் செதுக்கப்பட் டிருக்கின்றன. இன்னும் சில இடங்களில் பெரிய மரத்தின் அடிப் பாகத்தைச் சுற்றி பூத் தொட்டிகளும், இங்கிலீஷ் செடிகள் நிறைந்த தொட்டிகளும் அலங்காரமாக அமைந்து அதன் மத்தியில் ஆனந்த கரமாகப் பொழுது போக்கும் பொருட்டாக அநேக ஆசனங் களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் சில விடங்களில் பெரிய மரக்கிளைகளினின்றும் கெட்டியான கயிறுகளைக் கட்டி ஊஞ்

தினந்தோறும் சங்கீத சாகரத்தில் ஆழ்ந்திருந்தால் தேகப் பிணி, மனோ வேதனை யாவும் அகன்று கல கலப்பான தெம்பை அளிக்கின்றது. மனத்தில் ஆனந்த ஊற்று ஊறுகின்றது. இது எனது கைகண்ட அநுபவம்.

சல் போன்று பலகை அமைத்து அக்கயிற்றைச் சுற்றிலும் செடிகள் படரவிடப்பட்டிருக்கின்றன. பங்களாவின் உட்புறம் எந்தப்பக்கம் நோக்கினும் சலவைக் கற்களினாலாகிய வேலைப்பாடுகளும், நிலைக் கண்ணாடிகளும், அழகிய சிலைகளும், அற்புதமான அலங்காரங்களும் வெகு மனோகரமாக இருந்தன. இந்த ஆனந்த விலாசத்தைக் கண்ட யாவரும் இது ஓர் பெரிய ஜமீந்தாரின் மாளிகையோ, அன்றிச் சிற்றரசன் வாழும் சித்திர விலாசமோ, என்று ஆனந்தவிலாசம் என்கிற பெயருக்கு மிகவும்;பொருத்தமான ஆனந்தத்தை அள்ளி வீசும் இவ்வற்புத பங்களாவை எவரும் கொண்டாடிப் போற்றுமவிரார். இந்த ஆனந்த விலாசத்தைக் கண்டுகளிக்கும் பொருட்டாக ஏதேனும் ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு ஜனங்கள் இங்குவந்துப்பார்த்துவிட்டுச் செல்வது வழக்கம். இத்தகைய அற்புதமான ஆனந்த விலாசத்திலிருக்கும் நமது விமலநாதன் தன்னுடைய கோர்ட்டு விஷயமாக ஏதோ வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய கோர்ட்டு வேலைபார்க்கும் இடம் ஓர் பெரிய அழகிய விஸ்தாரமான கூடம். அவ்விடத்தில் அநேக நாற்காலிகளும், சோபாக்களும், மேஜைகளும், பீரோக்களும் நிறைந்திருந்தன. ஆங்காங்கு இங்கிலீஷ் செடிகள் தொட்டியுடன் அழகாக அமைந்திருந்தன. நாற்புறமும் பெரிய ஜன்னல்கள் பொருந்தியிருந்தன.

விமலநாதன் உட்கார்ந்திருந்த நாற்காலி நாற்புறமும் சுழலக் கூடிய நாற்காலியாதலால் அதில் அமர்ந்து அவன் ஏதேதோ யோசனைகளில் ஆழ்ந்து ஒருபுறமாகத் திரும்பினான். அவ்வமயம் நமது சுலோசனா படத்தின் அருகில் நின்று கண்ணீர்விட்டுக் கலங்குவதை ஜன்னல்வழியாகக் கண்டு, திடுக்கிட்டவனாய்த் தன் கையிலிருந்த புத்தகத்தைப் பொட்டெனக் கீழே போட்டுவிட்டு மெல்ல எழுந்து சுலோசனா இருக்கும் இடத்திற்குப் பின்புறமாகச் சென்று நின்று, "சுலோசனா! சுலோசனா! ஏனம்மா கண்கலங்குகின்றாய்? என்ன சங்கதி! உன் மனம் வருந்தும்வண்ணம் என்ன நேர்ந்தது.

கணவன் மனைவியாயினும் எப்போதும் நகைத்துக்கொண்டே இருக்கும் ஆனந்தம் ஒருவிதம். இடையில் விளையாட்டாக வரும் சிறு மனஸ்தாபம் தீர்ந்த பிறகு நகைப்பது ஓர் தனித்த ஆனந்தமாகின்றது.

என் புலம்புகின்றாய்?'' என்று கூறிக்கொண்டே அவளுக்கு எதிர் புறமாக வந்தான்.

இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்ட சுலோசனை திடுக்கிட்டவளாய்த் தன் விழிகளைத் துடைத்துக்கொண்டு "ஒன்றுமில்லையே! ஏதோ என் பெற்றோர்களின் படத்தைக் கண்டேன்...கண்ணீர் வந்துவிட்டது'' என்றாள்.

விமல:—உம். எந்த வழியில் உன்னைத் தேற்றினால், உன் மனப்பிணி அகலும். பாழும் விதிசெய்த கூற்று ஒன்றிரண்டல்ல. நிற்காதே அம்மா; இப்படி உட்கார்ந்துகொள். கண்ணீர் விடாதேயம்மா! உனக்குச் சற்று மனம் நிம்மதியாயும் சந்தோஷமாயும் இருக்கும்பொருட்டாகவே உன்னை யான் இங்கு அழைத்துவந்தேன். இவ்விடத்திலும் வருத்தமுற்று வாடும்படி நேருகின்றதே!

சுலோ:—என்னுடைய பிறவியில் சந்தோஷமென்பதுவும் உண்டா? இனி என்னுடைய ஆன்மா பிரிந்தகாலையில் நிம்மதியான சந்தோஷத்தை யான் அடைவேனே யல்லாது, மற்றபடி இல்லை. நான் ஊருக்குப் போகவேண்டும். ;சீக்கிரம் என்னை அனுப்பிவிட்டால் நல்லது.

விமல:—ஐயோ! இதற்குள்ளாகவா நீ போகவேண்டும்.? இன்னும் பத்து தினமேனும் இங்கிருப்பாய் என்று எதிர்பார்க்கின்றேனே! என்ன அவசரம். என்பொருட்டாகப் பத்து நாள் லீவு வாங்கிக்கொள்ளலாகாதா! இச்சென்னைமா நகரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு இங்குள்ள கண்காட்சிகளை எல்லாம் பார்த்துவிட்டுப் பிறகு போகலாம். ஆனல் உங்கள் பெங்களூரில் உள்ள வினோதக் காட்சி

"கணவன் மனைவி யிவர் காணில் உயிருடம்பாம்'' என்றபடி உயிரும் உடலும் கலந்த தம்பதிகளாயிருப்பினும் சொல்லத்தகாத வார்த்தைகளாகிய சுடு சரங்களினல் மனம் வெதும்பி தத்தளித்துவிடுகின்றது. அதே காரணத்தினல் பலவிதமான கேடுகளும், உயிர்ச்சேதங்களும் சேர்ந்துவிடுகின்றன. இது உலகத்தில் அநேக வீடுகளில் பிரத்யக்ஷமாக நடக்கும் அனுபவமாக இருக்கின்றது.

களைக் கண்டிருப்பதால் இங்குள்ளவை உனக்கு ஓர் பெரிதாகத் தோன்று அல்லவா!

சுலோ:—அப்படி நினைக்கவேண்டாம். அந்தந்த ஊரிலிருக்கும் காட்சி ஓர் தனித்த அழகுதான். ஒவ்வோரிடத்தில் ஒவ்வொன்று அருமையாக இருக்கலாம். இவைகளைப் பற்றி நான் வித்தியாசமாக நினைக்கவில்லையே.

விமல:—நான் அதற்காகச் சொல்லவில்லை. எவ்விதமாயினும் உன்னைச் சில தினங்கள் வரை இங்கு தங்கச் செய்யவேண்டு மென்பதே எனது கோரிக்கை. இங்கிருப்பதற்கு உனக்கு யாதொரு ஆக்ஷேபணையு ;மில்லையே! ஏன் இப்போதே ஊருக்குப் போகவேண்டு மென்கிறாய். இவ்விடத்தை நீ வித்தியாசமாக நினைக்கலாகுமா?

சுலோ:—நான்! வித்தியாசமாக நினைப்பதாயின் இங்கு வருவேனா! அப்படிக்கொன்றும் நினைக்கவேண்டாம். உங்களுடைய விருப்பப் படிக்கே விவாகத்திற்கு வந்தேன். இவ்விடத்திற்கும் வந்தேன். வந்து நாட்கள் ஆகிவிட்டன வல்லவா?

விமல:—சுலோசனா! இப்போது நினைத்தாலும் என் மனம் பதறுகின்றது. ஏனெனில்:நான் முன்னொரு காலத்தில் உனக்குக் கடித மனுப்பியதையும் அதற்கு நீ என் கழுத்தை வெட்டுவது போன்ற பதிலளித்ததையும், பிறகு அகஸ்மாத்தாகத் தோட்டத்தில் சந்தித்தபொழுது உன்னமுதம் போன்ற வாயினால் வந்த மொழிகளையும் நினைக்கின் என்னுள்ளம் உருகுகின்றது. இந்தக் கல்யாணக் கடிதத்திற்கு அவ்வாறான பதில் தான் வந்துவிடுமோ என்று மிகவும் வருத்தமுற்றிருந்தேன். யார் செய்த புண்ணியத்தின் பலனோ! தந்தியைக் கண்டு சிந்தை களித்தேன்.

"நான் வேலையாயிருக்கையில் தொந்தரவு செய்யாதே" என்று எத்தனை தரம் எடுத்துக்கூறினாலும் சிலருக்கு அது உரைப்பதே இல்லை. அப்போது தான் தமது 'தொணதொண' பாடத்தைத் திருப்பித்திருப்பி படிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

82
210025

கலோ:—(தலை குனிந்தவண்ணம் கண்ணீர் பெருகப் பேசத் தொடங்கி) "மை டியர் அன்கில் (Uncle) எல்லாம் காலத்தின் கோலம். தங்களுடைய கல்யாணக் கடிதத்தைப் பார்க்கும்வரையில் நான் ஒரு மனிதரையே பல மனிதராக எண்ணி ஏமாந்திருந்தேன். அவ்வித வேற்றுமை மனத்தினளாக நான் இருந்த காலத்திய நிகழ்ச்சிகள் பல்வேறுவிதமாக நடந்துவிட்டன. நான் செய்தவை என் வரையில் நன்மையைச் செய்தனவேயன்றி தீமை விளைவிக்கவில்லை. தங்கள் மனம் புண்படும் என்பது என் மனமறிந்த விஷயமே! எனினும் காலத்தின் கோலத்திற்கேற்பக் காரியத்தின் முடிவும் நிகழ்கின்றது. அவ்விஷயத்தில் தாங்கள் என்னை மிகவும் மன்னிக்க வேண்டும். நீங்கள் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதை அப்போது உணரவில்லையாதலால் அங்ஙனம் நடந்தது. இனி அவ்வாறு ஒருபோதும் நடவாது. வருத்தப்படவேண்டாம்.

விமல:—மை டியர்! சலோசனு! நான் அக்கால நிகழ்ச்சிகளைப் பற்றி வித்யாசமாக நினைத்திருப்பேனுனல் பின்னர் எனது நடக்கை வேறுபட்டு மாறி இருக்கும்; அவைகளையும் நான் குணமாகவே கொண்டேன். அது பற்றி எனக்குக் கோப மில்லை. நீ செய்தது உனக்கு முக்கியமாக நன்மை தருவதாக விருந்ததாலேயே நான் அதனை வித்தியாசமாக எண்ணவில்லை. இனி என்னை இன்னுனென்று அறிந்துகொண்டாயல்லவா! இனி எங்கள் வீட்டையும் என்னையும் வித்யாசமாக! நினைக்கமாட்டாயே! நான் இனி உனது பெங்களூருக்கு வந்தால் தாராளமாக உன் வீட்டிற்கு வரலாகுமா?

கலோ:—இனிமேல் கேள்வியும்! [வேண்டுமா! தாராளமாக வரலாம். எனக்கென்று உறவு முறை :சொல்லிக்கொள்ள ஓர் மனிதரில்லையே என்று நான் வருத்தமுற்றதற்குத் தங்கள் உறவு தெரிந்த

"எத்தனை புத்திசாலியாயும், சகல விதத்திலும் மேதாவியாயும் இருப்பினும் நான் ஓர் கேவலமாக மதிக்கக்கூடிய பெண் ஜன்மம் எடுத்தேனே! கடவுளே! என்னையேன் இவ்விதஜன்மமெடுக்கச்செய்தாய்?" என்று ஒரு குட்டுப்பட்ட மங்கை தெரிவித்து வருந்தினுள்.

பிறகு இனியும் வேற்றுமை கொள்வேனு! அங்கு நீங்கள் குடும்ப சமேதராகவே வரும்படியாக நான் கோருகிறேன்.

விமல:—ஓ! அதற்கென்ன தடை! இனிமேல் என் தாயார் உன்னை விடவே மாட்டாள். உன்னிடத்தில் அவளுக்கு அத்தகைய பிரியம் ஏற்பட்டுவிட்டது. உன்னுடைய சொந்த மனுஷியாக நீ அவளை நினைத்து நடக்கலாம். என்னுடைய (மாஸ்டர்) வக்கீலுக்கு அடிக்கடி பெங்களூரில் கேஸ் வருகிறது. அவருடன் நானும் இரண்டொரு தரம் வந்திருக்கிறேன். ஆனுல் உன் வீட்டுப் பக்கமே வரவில்லை. காரணம் முன்பு நிகழ்ந்த சம்பவமே யாகும். இனிமேல் அங்ஙனம் செல்லேன்''—என்று இவர்கள் பேசிக்கொண் டிருந்தவனைத்தையும் அந்த ஹாலுக்குப் பின்புற முள்ள ஜன்னல் வழியாக விமலநாதனின் மாமியார். (பரிமளாவின் தாயார்)கவனித்து விட்டாள். உடனே அவளுக்கு பாமர மூட ஜனங்களுக்கு ஏற்படக் கூடிய பொருமையும் சந்தேகமும் நிமிஷத்தில் உண்டாகிவிட்டது. சுலோசனுவும் விமலநாதனும் கள்ள; எண்ணங் கொண்டே பேசுவ தாக மனத்தில் தீர்மானித்துவிட்டதுடன் எங்கேயோ விருந்த தனது புருஷனையும்: அழைத்துக்கொண்டு வந்து இவர்களைக் காண் பித்து, "ஐயோ, நாம் இம் மனிதனின் நடத்தையை அறியாமல் பாழாகி விட்டோமே! நமது குழந்தையை—அருமைக் கண்மணி யை—இந்த வஞ்சகனுக்குக் கொடுத்து மோசம் போய்விட்டோமே! இவன் நமது குழந்தையை இனிமேல் நன்ருக நடத்துவானு! இந்தப் பெண்ணை இவன் ரயிலடியிலிருந்து அழைத்துக்கொண்டு வந்த ஒய்யாரத்தைப் பார்த்தபோதே எனக்குச் சந்தேகமாக இருந்தது. இப்போது அச்சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. அவர்கள் இருவரும் எவ்வளவு சமீபத்தில் உட்கார்ந்து இங்கிலீஷி லேயே அப்போதிலிருந்து ஏதேதோ விஷயங்களைப் பிளந்து தள்ளுகின்ருர்களே'' என்று பிரமாதமாக ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்து விட்டாள்.

எவ்வளவு அன்யோன்யமாகத் தம்பதிகள் இருப்பினும் சில விஷயத்தில், சில வேளைகளில் மனைவியின் மனத்தைப் புண்படச்செய்யாத ஆண்பிள்ளைகள் இல்லை.

இதைக் கண்ட அவள் புருஷன், அவளைக் கத்த விடாது வாயைப் பொற்றி "பேசாதிரு. கத்தாதே! நீ கேவலம் விவேகம் இல்லாது பேசுகிறாய். இக் காலத்து விஷயமே உனக்குத் தெரியாது. நாகரிகமற்று நீயும் வளர்ந்துவிட்டாய். இவ்விருவரும் பேசுவதைக் கண்டு நீ பெருத்த அனர்த்தம் செய்துவிடாதே! இக்காலத்தில் படிப்பாளிகள் நிறைந்துவிட்டார்கள். இருபாலரும் படித்துப் புதிய நாகரிகப் பழக்கங்களில் ஈடு பட்டவர்களாதலால் இவைகள் சாதாரணமாக அவர்களுக்கு (அவ்வகையாருக்கு) குற்றமாக மாட்டாது. இப் பெண் நன்ருகப் படித்தவளாம். அதோடு உறவும் இருப்பதால் சகஜமாகப் பேசுகிருள். அவள் முகத்தில் களங்கமே சிறிதும் இல்லை. கவனித்தாயா! நிஷ்களங்கமாக—சகஜமாய்ப் பேசுகிருள். உன் மூடத்தனத்தினுல் உளறிவிடாதே! இவை மாப்பிள்ளையின் செவியில் பட்டால் விபரீதமாகிவிடும். போகப் போகப் பார்த்துக்கொள்வோம். பேசாமலிரு" என்று தேற்றி விட்டு, அவர்கள் என்ன பேசுகிருர்கள் என்பதைக் கவனித்தவாறு இன்னும் சற்று சமீபத்தில் வந்து நின்ருர்.

இங்கு நடக்கும் சூது வாதுகளை அறியாத சுலோசனுவும் விமல நாதனும்; அந்த ஜன்னல் புறமாக முதுகைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்ததால் எதையும் கவனியாது பேசிக் கொண்டே இருந்தார்கள்.

விமல:—சுலோசன! பரிமளாவைப் பற்றி உன்னுடைய அபிப்ராய மென்ன? அதை நீ எனக்குத் தெரிவிக்கவில்லையே!

சுலோ:—தெரிந்த விஷயத்தைத் திரும்பக் கூறுவானேன் என்று வாளா விருந்தேன். பழுது பாதேனும் இருந்தா லல்லவோ கூறவேண்டும்? குடும்பத்திற்கு ஏற்ற குணவதியாயும், வசீகரமான அழகுடையவளாயும் இருக்கிருள். சங்கீதம் வெகு நன்ருகப் பாடுகின்ருள். வீணை வாசிப்பது நிரம்பவும் அற்புதமாக இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் பரிமளாவைப் போன்று

நினைத்த காரியம் ஆகாதுபோவதும், கொண்ட ஆவல் பூர்த்தியாகாமல் தடைப்பட்டுவிடுவதும் அதனுல் எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டுவிடுவதும் பல குடும்பங்களில் எப்பொழுதும் நடைபெறும் சகஜமான விஷயம்.

வேறு எவரும் வீணை வாசித்துக் கேட்டதில்லை. வெகு ஆநந்த மாயிருக்கிறது. உங்களுக்கு நல்ல அதிர்ஷ்டந்தான்.

விமல:—உம். அதெல்லாம் இருக்கட்டும். வீணை வாசிப்பது பற்றி நானும் சந்தோஷமே அடைகின்றேன். ஆனல் இக்காலத்திற்கு ஏற்ற நாகரிகம் தெரியவில்லை. அது எனக்குப் பெருத்த குறையாகவே இருக்கிறது.

சுலோ:—இதுதானு பிரமாதம்! இப்பட்டண வாசத்தில் பத்து நாள் பழகினல் நாகரிகம் தானே வந்துவிடுகிறது. இதற்காக வருத்தமென்ன?—என்று பேசிக்கொண்டிருக்கையில் பாரோ கூலிக்காரன் வந்துவிட்டதால் விமலநாதன் எழுந்து சென்ருன்.

மறைந்து பார்த்துக்கொண்டிருந்தவருக்கு இவர்களின் சம்ஷணை விபரீதமாக வின்றிச் சகஜமாகவே தோன்றியதால் அதைத் தன் மனைவியிடத்தில் தெரிவித்துவிட்டுச் சென்ருர். விமலநாதனின் தாயார் சுலோசனுவிடம் வந்து உட்கார்ந்து ஏதோ பழங் கதைகளை யெல்லாம் பேசிக்கொண்டே வருந்திக் கண்ணீர் சிந்தினுள்.

விமலநாதன் தாயார்:—அம்மா சுலோசனு! இதுபரியந்தம் தான் எங்கள் உறவே உனக்குத் தெரியாமலிருந்தது. இனிமேல் நாங்கள் அன்னியரல்ல. நீயும் உன் தம்பியும் தனியாக ஏன் அந்த ஊரில் வாசம் செய்யவேண்டும்? உனக்கு இப்பரீக்ஷை முடிந்ததும் என்ன படிக்கப் போவதாக உத்தேசம்?

சுலோ:—பாட்டி! நான் எடுத்த பிறவி தான் ஒருவிதத்திலும் பலனும் பெயரும் இல்லாது பாழாய் விட்டது. ஆகையினல் எனது கல்வியைக் கொண்டேனும் என் ஜன்மாவினல் பிறர்க்கு உதவி புரியும் பொருட்டு இந்தப் பரீக்ஷை முடிந்ததும் (மெடிகல்) டாக்டருக்குப் படிக்க உத்தேசம். அதற்காக வேண்டிய பிரிவுப் பாடத்தை நான் பிரதம பாடமாக எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

மனம் மிகவும் நொந்து தத்தளிக்கும் சமயத்தில் சிலருக்குத் தானகவே மயக்கமும் தூக்கமும் வந்துவிடுகின்றன- அக்காலையில் அவர்கள் சவத்திற்கு ஒப்பாகவே ஆய்விடுகிருர்கள்.

வி....தாயார்:—ஐயோ! என் செல்வமே! உன் வார்த்தையைக் கேட்க என் மனம் பதறுகின்றதே! அழகையும் அறிவையும் எழுதிய பிரமன் அதிர்ஷ்டத்தை எழுதாது பாழாக்கி விட்டானே! இத் தகைய இளம் பிராயத்தில் உன் மனம் முறிந்துவிடக் கூடிய விதி உனக்கு வந்துவிட்டதே? இது கர்ம மல்லவா! நீ உன் விருப்பப் படியே மருத்துவப் படிப்பை இவ்வூரிலேயே பயின்ருல் என்ன! நாங்கள் ஒரு பெரிய துணையாக இருக்கின்ரோ மல்லவா! ஏன் தன்னந் தனியே இருக்கவேண்டும்?

சலோ:—பாட்டி! என் பிறவிக்கு யாருமே அற்ற அனுதை என்று நான் தீர்மானித்துவிட்டதற்குப் பேரன்பு ததும்பிய உங்கள் உறவு தெரிந்து கிடைத்ததே என் பாக்ய மென்பேன். கடவுளே என்னைத் தனிக் கட்டையாகச் செய்துவிட்டார். இனி இது எங்கு கிடந்தால் என்ன, என் பரீக்ஷை முடிந்தபிறகு பார்த்துக் கொள்வோம்: மேலும் எனக்கு இவ்வுஷ்ண பூமி உடம்புக்குச் சரிவாராதென்று இப்போதே தோன்றுகின்றது. பிறகு யோசிக் கலாம். உங்களுடைய அபரிமிதமான அன்பு என்றும் நிலைத் திருப்பதுதான் எனக்கு முக்கியம்.

வி....தாயார்:—என் கண்ணே! உன் பெரிய அன்னையார் உயி ருட னிருந்தால் உங்களை இப்படி அனுதையாக விடுவாளா! எல்லாம் துரதிருஷ்டம் தான். உம். பழங்கதைகளைக் கிளறுவதில் பயன் யாது? ஏதோ! சற்று சங்கீதம் பாடு கேட்கலாம்; பரிமளாவையும் கூப்பிடுகிறேன்" என்று கூறிப் பிறகு பரிமளாவையும் அவ்விடத் திற் கழைத்து வீணை வாசிக்கச் செய்தாள். பரிமளாவும் வெகு இனிமையாக வீணுகானம் செய்யத் தொடங்கி பைரவி ராகத்தை ஆலாபனம் செய்து,

---

"பட்டால்தான் தெரியும் அனுபவம்" என்கிற தேவ வாக்கை உள் ளம் நினைத்து வியப்புறுகின்றது. நாமே பட்டுத்தேறும் அனுபவத்திற்கே ஓர் தனித்த ருசி.

ராகம்: பைரவி—தாளம்: ரூபகம்.

பல்லவி

தல்லி நின்னு நெர நம்மிதி அம்பா! சரணாகத ரக்ஷகிதேவி (த)

அனுபல்லவி

சல்லக நீது கடாக்ஷமுனு சந்ததமு கோருசுன்ன்னு (த)

சரணம்

கருணாசாகரி நீவே தருணமிதே காவவம்மா!
அரஸிமிஷமு நினுமரவக ஸ்மரிம் சுசுன்னானு அம்பா! (த)

என்ற கீர்த்தனத்தை வெகு இனிமையாகப் பாடி முடித்துப் பின் "நின்னுவினா நாமதேந்து" என்கிற தியாகராஜ கீர்த்தனையையும் வெகு அருமையாகப் பாடினாள். பிறகு சில ராகங்களை ஆலாபனம் செய்தாள். வீணாநாதம் கேட்ட உடனே விமலநாதனும் கணக்காரனை அனுப்பிவிட்டு இவ்விடத்திலேயே வந்து உட்கார்ந்துவிட்டான். விமலநாதனின் தாயார் சுலோசனாவையும் பாடும் படியாகச் சொன்னாள். சுலோசனாவும் தட்டாமல் பாடத் தொடங்கி பாடகர் போற்றும் தோடிராகத்தை ஆலாபனம் செய்து,

ராகம்: தோடி—ரூபக தாளம்.

பல்லவி

தாரினிதெலுஸகொண்டி! தாசரதே! தயஜேஸிப்ரோவுமையா
தாசரதே (தா)

அனுபல்லவி

தீருடௌ ஸ்ரீராம சந்த்ரா! நீதிவ்ய
வாரிஜபாதமுலோ வச்சி சேருட மஞ்சி (தா)

ஏதேனும் சாமான்களைச் செப்பஞ் செய்யக் கொடுத்துவிட்டால் அதை இலேசில் கொடுப்பதில்லை. கேட்டுக்கேட்டு வாயும் வலித்துவிடுகின்றது. செப்பனிடுபவன் கையில் பணம் தட்டிவிட்ட சமயத்தில் சாமானைக் கொணர்ந்து கொடுத்துவிட்டுப் பணத்தைக் கேட்கிறான்.

16 MAR 1931

சரணம்

எல்லப்புடுதண்ட்ரி நீது சல்லனிநாமமு பஜிம்ஸ
அந்தமுதோ அபயமிச்சு அரவிந்தலோசனுநாது
உல்லமந்து பக்தி கல்கி ஒகடே நீவனிதலசி
பந்தமந்துவதலிநீது பாதமுலனு பட்டடகு (தா)

என்கிற கீர்த்தனத்தைப் பாடி முடித்துப் பின் சங்கராபரண ராகத்தை ஆலாபனம் செய்து,

ராகம்: சங்கராபரணம்—ஆதி தாளம்.

பல்லவி

கருணிதே கமல லோசனு! கருணிம்சவைய்யா
கரிராஜபோஷா! (க)

அனுபல்லவி

தருணினிமுர வினிதயதோனு
வரமிச்சி காசின பரம தயாள (க)

சரணம்

மந்தகாஸவதனு வாரிஜசரணு!
அந்தமைன அரவிந்தமுகலோலா
சிந்ததீர்ச்சி ப்ரோவ ஸ்ரீவாசுதேவா!
பந்தமேலாரா, சுந்தராங்க தீரா (க)

என்ற கீர்த்தனத்தை வெகு இனிமையாகப் பாடினள்.

இதைக் கேட்ட எல்லோரும் அபாரமான ஆநந்தத்தை படைத்து பூரித்தார்கள். விமலநாதனின் தாயார் சுலோசனுவின்

பின்னும் சிலர், செப்பனிடாமல் பண்டத்தை அப்படியே மூலையில் போட்டுவிட்டு, அதற்குப் பணம் வேண்டும், இதற்குப் பணம் வேண்டுமென்று பணத்தை வாங்கித் தின்றுவிட்டு, உண்மையாகச் செப்பனிடுஞ் சமயம் பணமில்லாது வேலையை நிறுத்திவிடுகிறார்கள். இந்த மோசத்தை யறிந்த சொந்தக்காரர்கள் செப்பஞ் செய்யாவிட்டால் போகிறது பொருளைக் கொடு. என்று வாங்கிக்கொண்டு வருவதற்குள் பகீரதப் பிரயத்தனமாகிவிடுகின்றது.

ஒவ்வொரு அம்சமும் இத்தகைய உன்னத பதவியிலிருந்தும் அதிர்ஷ்டம் மட்டும் அழிந்துவிட்டதை எண்ணி மிக்க விசனித்தாள். விமலநாதன் சங்கீத சாகரத்தில் மூழ்கினன்; வெகுநேரம் வரையில் எல்லோரும் ;சங்கீதாம்ருதத்தைப் பருகிக் களித்துப் பின்னர் தத்தம் காரியங்களைக் கவனிக்கச் சென்றனர்கள்.

அன்றைய தினம் பரிமளாவின் பந்துக்கள் பரிமளாவையும் அவள் பெற்றோர்களையும் விமலநாதனையும் தம் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தார்கள். விருந்துண்டு வந்தபின் விமலநாதன் ;தனது மோட்டார்காரில் கோபிநாதனையும் சுலோசனுவையும் தன் தாயாரின் அனுமதியின் பேரில் அழைத்துச் சென்று சென்னையிலுள்ள முக்கியமான காட்சி இடங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்த பிறகு அன்று மாலையில் "வெல்லிங்டன்" சினிமாவுக்கு அழைத்துச் சென்றான். அங்கு நடந்த படக் காட்சியைக் கண்டு களித்துப் பின்னர் வீடு வந்து சேர்ந்தார்கள்.

சுலோசனு பின்னும் இரண்டு தினம் அவ்விடத்தில் இருந்து அதன்மேல் பெங்களூருக்குப் பிரயாணமாகிவிட்டாள். விமலநாதனின் வீட்டு மனிதரே சுலோசனுவை அனுப்ப மனம் இசையவில்லை யென்றால், விமலநாதனின் மன நிலைமையைக் கூறவும் வேண்டுமா! வருத்தத்தை முற்றும் தன் மனத்தில் அடக்கினன். சுலோசனுவை வழி பனுப்பத் தயாரானன். சுலோசனுவோ கேவலம் ஒன்று மறியாத சிறு குழந்தையைப் போன்ற குணமுடைய வளாகையால் அவளிடத்தில் பிரியம் வைக்காதவர்களே இல்லை, அவளும் விமலநாதன் வீட்டாரின் மீது அத்யந்த வாஞ்சையை வைத்துவிட்டாள். தனக்கென்று கூறிக்கொள்வதற்கு ஒரு மனிதர் கிடைத்துவிட்டதே அவளுக்குப் பெரிய புதையல் கிடைத்தவாறு ஆகிவிட்டது. அவளுடைய மனதில் அன்பின் வெள்ளம் சுரந்து

சமயல் நன்ருகப் பக்குவமாகிய அன்று வயிற்று மந்தமும் பசியின்மையும் உண்டாகி விடுவதால் சாப்பாட்டின்மீது விருப்ப மின்றி வேண்டா வெறுப்பாகத் தின்று சமயலையும் தூஷிக்கும்படியாகி விடுகின்றது. நல்ல கடும்பசியிலோ உப்பில்லாத சமயலும் தேவாம்ருதமாகிவிடுகின்றது.

விட்டதால் அவர்களைப் பிரிய அவளும் மனம் வருந்தினாள். விமலநாதன் தன் காதல் நிரம்பிய உள்ளத்தை யடக்கி யாளும் திறனற்று சுலோசனா ரயில் ஏறும் சமயம் கண்ணீர் விட்டுக் கலங்கிவிட்டான். சுலோசனாவுக்கு விமலநாதனிடத்தில் உள்ள அன்பின் முதிர்ச்சியால் கண்ணீர் பெருகிவிட்டது. இருவரும் ஏதேதோ பேசிக்கொண்டே இருக்கையில் வண்டி புறப்பட்டுவிட்டது. இருவரும் பிரிந்த காட்சி இன்னவாறிருந்திருக்குமென யூகித்தறிதலே நலம். முகம் மறையும் வரையில் ஒருவரோ டொருவர் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். கண்மாரியுடன் முகம் மறைந்துவிட்டது. சுலோசனா தனது ஆசனத்தில் உட்கார்ந்தாள். பெங்களூரிலிருந்து தான் வந்த காலத்தில் நடந்த சம்பவங்கள் முற்றும் நினைவிற்கு வந்துவிட்டதால் பலவிதமான குழப்பத்துடன் ஒன்றும் தோன்றாது கலங்கிவிட்டாள். தான் பெங்களூரை விட்டுச் சென்ற நாள் முதல் இப்போது திரும்பி வரும் நாள் வரையில் நடந்த சகல விஷயங்களும் ஒலி கடலிற் றோன்றி பெழும் அலைகள் போல அவள் நினைவில் தோன்றி மனதில் புரள வாரம்பித்தன. விமலநாதனின் பெற்றோர்கள் தன்பால் அன்புகொண்டு நடந்தவிதம் அவள் மனதில் அப்படியே பதிந்துவிட்டது. விமலநாதனின் கரை காணாத பிரியம் சுலோசனாவை நிலைபுரளச் செய்துவிட்டது. இத்தகைய மனோ வேதனையுடன் இரயில் பிரயாணத்தை முடித்து இரவு 8 மணிக்குப் பெங்களூர் ஸ்டேஷனை அடைந்தாள் சுலோசனா.

ஏற்கனவே சுலோசனா தான் புறப்பட்டுவரும் தினத்தைக் கடிதத்தின்மூலம் பிரேமாமணிக்குத் தெரிவித்திருந்தபடியால் அக்கடிதத்தில் கண்டபடி பிரேமாமணியும் அவள் புருஷனும் இரயி

சிலர் "எங்கள் வீட்டிற்கு நீங்கள் வருவதே இல்லை. உங்களுக்குப் புதுப் புது மனிதர்கள் கிடைத்து விடுவதால் எங்களை மறந்து விடுகிறீர்கள்" என்று குறை கூறுகின்றார்கள். அவர்களின் வீட்டிற்குச் சென்றாலோ வந்தவர்களுடன் சரியாகப் பேசுவது மில்லை; கவனிப்பது மில்லை. அவர்கள் கூறிய வார்த்தை எதற்கோ தெரியவில்லை!

லடிக்கு வந்து; காத்துக்கொண்டிருந்தார்கள். வண்டியும் நின்றது. சுலோசனவும் கோபியும் இறங்கினர்கள். பிரேமாமணி வெகு அன்போடு சுலோசனவை வரவேற்று, வண்டி யமர்த்தி அதில் அவளையும் கோபியையும் 'ஏற்றிக்கொண்டுபோய்த் தன் வீட்டை படைந்து அன்று இரவு சுலோசனவைத் தம்முடன்கூடவே இருக்கச்செய்து, கல்யாணத்திற்குச் சென்றுவந்த விவரங்களைப்பற்றி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு மறுநாள் காலையில் சுலோசனவை அவள் வீட்டிற்கு அனுப்பித்தார்கள்.

சுலோசன பழையபடி தன் காரியங்களைக் கவனிக்கலானுள். தன்னுடைய அந்தரங்கமான விஷயங்களில் எதையும் வெளியிடாது வெகு ஜாக்கிரதையாக மனத்துள்ளடக்கியவாறு தனது படிப்பையே முக்கியமாகக் கவனிக்கத் தொடங்கினுள். உடலைவிட்டுப் பிரியும் உயிர்போன்று விமலநாதன் தன் வீட்டை படைந்தான். சுலோசனவின் நினைவே அவன் மனதை பெரிதும் ஏக்கிவிட்டது. பரிமளா வயதுவந்த நங்கையாதலால் சோபன கல்யாணத்தை முடித்து அவளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு அவள் பெற்றேர்கள் ஊருக்குப் போய்விட்டார்கள்.

விமலநாதனுக்குத் தனது மனைவியாகிய பரிமளாவின்மீது பூர்ணமான அன்பு இல்லையெனினும் அவளுடைய அடக்கம், பணிவு, சங்கீத ஞானம், முதலியவைகளைக்கண்டு சிறிது அன்புகொண்டான். சோபனத்தன்று பரிமளா நிரம்பவும் அலங்காரத்துடன் சயன அறையை அடைந்தாள். தன்னுடைய வரவை எதிர்நோக்கி ஆவலுடன் தன்னுயகன் காத்திருப்பான் என்று அவள் எண்ணி வந்ததற்கு நேர்மாறுக, விமலநாதன் ஒன்றும் தோன்றுதவனுய் மஞ்சத்தில் நிந்தாக்ராந்தனுய் சயனித்துக்கொண்டிருப்பதைக் கண்டதும்

சில பிச்சைக்காரர்களின் தரித்திர வசத்தினுல் எட்டு தெருவு சென்று பிச்சை எடுத்தாலும் ஒரு வயிறுக்கு வேண்டிய அரிசி கிடைப்பதில்லை. சிலர் தடபுடலாக வீட்டுக்காரர்களைத் தோத்திரம் செய்வதும் இச்சகம் பாடுவதுமான மாய ஜாலம் செய்து எட்டு வீட்டுக்குச் சென்று வருவதற்குள்ளேயே பையை நிறைத்துக்கொள்கிருர்கள். எதற்கும் அதிர்ஷ்டந்தான் காரணம்.

சிறிது வருத்தமுற்றாள். நாணத்தினால் தலைகுனிந்து சற்று விலகி நின்றாள். விமலநாதன் பரிமளா நிற்கும் மரியாதையையும் ஒரு மாதிரியான தோற்றத்தையும் கண்டு மனமிரங்கினான். எனினும் சுலோசனாவின் நினைவை மறப்பதற்கு அவனால் கூடவில்லை. வாய் திறவாமல் மௌனமாகவே சற்றுநேரம் சயனித்திருந்தான். பிறகு எழுந்து உட்கார்ந்தான்; பரிமளாவை நோக்கினான்.

தன் கணவன் தன்னைப்பார்த்த மாதிரியிலிருந்து அவன் தன்னிடம் என்ன சொல்லப்போகிறானோ வென்ற ஓர் பீதியை அடைந்து வெருண்டு நின்றாள். உடனே விமலநாதன் எதிரில் வந்து அவனுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து பதுமைபோல நின்றாள். பரிமளாவைக் கண்ட விமலநாதன் அவளிடத்தில், தான் என்ன சொல்வதென்று சற்று யோசித்தான். அந்த சோபன அறை முற்றும் சுலோசனாவின் பிம்பமே அவன் கண்களுக்குத் தென்படுகின்றது. தன்னுடைய உண்மையான இரகசியத்தை இவளிடம் உரைத்துவிடுவதா, வேண்டாமா? என்கிற கேள்வி அவன் மனதிற்குள்ளேயே போராடத் தொடங்கியது. நாம் இப்பரிமளாவின் மனத்தையும் குணத்தையும் அறியாது திடீரென்று நம்முடைய அந்தரங்கத்தைக் கூறிவிடுவது தவறு. அதனால் காரியம் கெட்டுவிடும். ஆகையினால் இவளுடைய குணகுணங்களை நன்கறிந்துகொண்ட பிறகுதான் நாம் நமது அந்தரங்கத்தை வெளியிட வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டவனாய்த் தன்னுடைய இரகஸியத்தை அவளிடத்தில் தெரிவிக்காது நிறுத்திவிட்டான். பிறகு பரிமளாவை நோக்கி "பரிமளா! இதென்ன அலங்காரம்; இந்த வேஷங்களெல்லாம் எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இவை களைக் களைந்துவிடு! இந்தக் கர்னாடக கோலங்கள் இனிமேல் செய்து கொள்ளாதே! தற்கால நாகரிகப்படிக்கு மிகவும் அழகாய் அலங்காரம் செய்துகொள். இத்தகைய தடிப்பான சேலையும், தலைமுற்றும்

சிலரை நாம் ஒரு யோசனை கேட்டால் அப்போதுதான் அவர்களுடைய தடபுடலையும் அட்டகாஸங்களையும், அனுவச்யமான வார்த்தைகளையும் தொடங்கிவிடுகிறார்கள். கேட்ட யோசனைக்குப் பதில் எப்போதோ தெரியவில்லை. இதென்ன சுபாவமோ!

இறுக்கிக்கட்டியுள்ள கோரமும் வேண்டாம்.. நாசூக்காகப் பக்க வகுடு வளர்த்துக்கொண்டு பின்னல்போட்டுத் தொங்கவிட்டுக்கொள். இல்லேயேல் பிச்சடை போட்டுக்கொள். சுலோசனுவைப் பார்! எப்படி இருந்தாள்; அவ்வாறு நீயும் செய்துகொள்" என்று இனிமையாகக் கூறினுன்.

இதுகேட்ட பரிமளா மிகுந்த வணக்கத்துடனும், நிரம்பவும் பயத்துடனும் பணிவாகப் பேசத்தொடங்கி "என் பிராணநாதா! இக்கோலங்களெல்லாம் பெரியார் செய்தவையாகும். தமது தாயாரே செய்தார்கள். அதை வேண்டாமென்று நான் எவ்விதம் தடுப்பதென்று பேசாதிருந்துவிட்டேன். இப்போது களேந்துவிட்டால் உங்கள் தாயார் கோபித்துக்கொள்வார்களோ?" என்முள்.

விமல.—பேஷ்! பரிமளா! என் தாய் களிக்கும்பொருட்டு நீ அலங்காரம் செய்துக்கொள்வதாயிருப்பின் இவைகளேக் கலேக்காதே. நானும் வற்புறுத்தமாட்டேன். உன் அலங்காரத்தினுல் எனக்கு ஒரு திருப்தியும்; மன அமைதியும் ஏற்படச்செய்யவேண்டுமாயின் என் இஷ்டம்போலச் செய்துகொள்ளத்தான் வேண்டும். பிறகு உன்னிஷ்டம்.

பரிமளா.—நாதா! பெரியாரின் மனம்போல நடக்காவிடின் அவர்களின் கோபத்திற்கு ஆளாக நேரும். மேலும் இந்த நூதனமான அலங்காரம் எனக்குப் பிடிக்கவில்லேயே! கோணல் வகுடு அந்தம்மாளுக்கு நன்முக இருப்பதாக நீங்கள் நினேக்கின்றீர்கள். அதைக் கண்டு பிறர் எத்தனே எளனம் செய்தார்கள் தெரியுமா? அதனுல் நான் பயப்படுகிறேன். உங்களுக்கு இவ்விஷயத்தில் கோபம் வருகிறது. நான் என்ன செய்வேன்?

விமல.—"அடாடா! முதலிலேயே முரட்டுத்தனமாகப் பேசும் இவளிடத்தில் நாம் விஷயத்தைக்;கூறுது தப்பினேம். இவள் தாய்

வருடந்தோறும் தவருமல் செய்துவரும் காரியத்தைக் கூட சில சமயம் நினேவில்லாது மறந்துவிடவும், பிறர் நினேப்பூட்டிய பின் காரியம் நடப்பதுமாக ஆய்விடுகின்றது.

ஒரு கர்னாடக மூடம். அதுபோலவே; மகளும் வளர்ந்திருக்கிறாள். ஐயோ! இந்த அல்ப விஷயத்திலேயே இவளுக்கும் நமக்கும் இத்தகைய வித்தியாசம் ஏற்பட்டுவிட்டதே! என்ன செய்வது?" என்று சற்று மௌனமாகத் தனக்குத்தானே யோசனை செய்தான். பிறகு ஒருவிதமாக சீற்றங்கொண்டவன் போல பரிமளாவை நோக்கி "உம். யார் யார் விதி எப்படியோ! அப்படித்தான் யாவும் நடக்கும். உன்னிஷ்டம்போல நீ இரு; என்னிஷ்டம்போல நான் இருக்கிறேன்" என்றான்.

சில மாதங்களாயின. விமலநாதன் தன் மனைவிக்கு இங்கிலீஷ் கற்பிக்க ஓர் உபாத்தியாயினியை நியமித்தான். பரிமளாவுக்கு நாகரிகமென்பதே இன்னதென்று விளங்கவில்லை. இந்த விஷயங்களில் தம்பதிகளுக்குள் ஒற்றுமை என்பதே இல்லாது, எப்போதும் சச்சரவாகவே இருந்தது. விமலநாதனின் மனப்படிக்கு பரிமளா சரிவர நடக்காத குற்றத்தைச் சிறிதுமறியாது, தன் கணவன் தன்னிடத்தில் பிரியமுடன் இருப்பதில்லையென்றும் வித்பாசமாக இருக்கின்றாரென்றும் மிகுந்த மனக்குறையோடிருந்தாள். தான் இங்கிலீஷ் கற்பதையும் தீராத இழவாக எண்ணிக் கற்றுவந்தாள். விமலநாதன் கேஸ் விஷயமாகத் தனது வக்கீலுடன் பெங்களூருக்குச் சென்று மறுநாளே திரும்பிவிட்டதால் சுலோசனாவீட்டில் அதிக நேரம் தங்காமல், சென்று விசாரித்துத் திரும்பிவிட்டான்.

பின்னும் சில மாதங்கள் செல்ல, பரிமளா கர்ப்பவதியாகி ஓர் ஆண் சிசுவை ஈன்றாள். இச்செய்தியைக் கேட்ட சுலோசனா மிக்க களிப்படைந்தாள். பரிமளா பட்டணவாஸத்தில் பழகியும், ஆங்கிலம் கற்றும், அநேகரின் நாகரிகங்களைப் பார்த்தும் திருத்தமடையாதிருந்த மனக்குறையினாலேயே விமலநாதன் பரிமளாவிடத்தில் அதிகமாகப் பேசுவதே கிடையாது. ஏதேனும் விஷயமிருப்

சில மனிதருக்குக் காரண மன்றியே சதா! உம். உம். என்று ஊங் கூட்டும் சுபாவம் அமைந்திருக்கின்றது. அவர்களுக்கு கோபமோ, மன வருத்தமோ வருங்காலத்தில் அந்த உம். சப்தம் பலத்துப், பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாகவும் ஆய்விடுகின்றது.

பின் அளவாகப் பேசுவதும், இல்லையேல் தன்வினையை எண்ணிப் புலம்புவதுமாகத் தன் காலத்தைக் கழிக்கலானன். பரிமளா தாய் வீடு சென்றாலும் அழைப்பதில்லை; வாராவிடினும் அதற்காக வியாகூலமடைவதில்லை, வந்திருப்பினும் கோபிப்பதில்லை. இவ்விதமே எதிலும் பற்றுக்கொள்ளாது விலகியே இருந்தவந்தான். விமலநாதனுடைய உடம்பு, மனோ வியாகூலத்தினல் மெலிவடைந்து கொண்டே வந்தது. அவனுடைய மகா கூர்மையான புத்தி நுட்பத்தினாலும், சாதுர்யமாக உரையாடி வழக்குப்பேசி ஜயிக்கும் சாமர்த்தியத்தாலும், நியாயவாதத்தொழிலில் வெகு விரைவில் பிரக்கியாதி யடையத் தலைப்பட்டான். அவனுடைய பெரிய வக்கீலும் தனக்கு வரும் வழக்குகள் சிலவற்றில் விமலநாதனையே வாதிக்கும்படியாக விட்டு அவனை நன்ருகத் தேர்ச்சியடையச் செய்துவந்தார்.

தன் தாய்வீட்டிற்குக் கர்ப்பவதியாக இருக்குங்காலத்திற் சென்ற பரிமளா பல மாதங்களாகியும் மீண்டும் வரவே இல்லை. அவள் ப்ரஸவித்துக் குழந்தைக்கு ஐந்துமாதகாலமாயிற்று. எத்தனை மாதங்கள் ஆனபின்பு கூட விமலநாதன் ஒரு தினமேனும் அங்கு சென்று குழந்தையைப் பார்க்கவில்லை. பரிமளாவுக்கு வரும்படியாயும் கடிதமெழுதவில்லை. அவள் தன் கணவன் தன்னை இவ்வாறு வைத்திருப்பது பற்றி மனதில் வருத்தங்கொண்டு சிந்திக்கத்தொடங்கினள். விமலநாதனின் பெற்றோர்கள் குழந்தையின் போஷணையை முன்னிட்டுத் தம்மருகியை வரவழைக்காமல் தாங்கள்மட்டும் சென்று பார்த்துவிட்டுத் திரும்பினர்கள். பரிமளாவுக்குத் தன்நாயகன் யாதுகாரணம்பற்றித் தன்னுடைய குழந்தையை வந்துப்பார்க்காமலும், தன்னை அழைக்காமலும் இருக்கிறரென்கிற ஏக்கமும் கவலையும் மனதைப் பற்றி வாதிக்கவாரம்பித்துவிட்டது. கர்னடகப்ரியை யாதலால், இது விஷயங்களைப் பெற்றோரிடமும் கூறாது மனதிலடக்கி அதனல் மெலியவாரம்பித்தாள் பரிமளா.

* * * *

ஒரு நாளின் 24 மணி நேரத்தில் குறைந்தது 8 மணி நேரமாகிலும் பிரியாது கூடவேயிருக்கும் உயிர்த்தோழியை, பல நாட்கள் பார்க்காதிருக்கும்படி நேர்ந்துவிடுங்காலையில், மனம் எவ்விதம் தத்தளிக்கும்?

22

நமது சற்குண சம்பன்னையாகிய சுலோசனு, தன்னுடைய படிப்பு விஷயத்தில் வெகு ஊக்கங் கொண்டு கவனித்து வந்தாள் அவளுடைய உயிர்த் தோழிகளுடன் கோவிலுக்கும், மாலை நேரங்களில் பூங்காவனங்களுக்கும் சென்று சற்று சந்தோஷமாகப் பொழுதைப்போக்கி வருவாள். காவேரியை வீட்டில் சேரவிடாது தடுத்துவிட்டாள். சுலோசனுவுக்கு முன்போன்ற அனுமதேயக் கடிதங்கள் வருவது மட்டில் நின்றபாடில்லை. பிரேமாமணி கூறியபடியே அந்தக் கடிதங்களை அவ்வப் பொழுது தீயிட்டுப் பொசுக்கிவந்தாள். இந்த சமயம் சுலோசனுவின் தந்தையினுல் ஏற்பாடு செய்யப்பட்ட போஷகர்களில் ஒருவர் இறந்துவிட்டார். மற்ருெருவர் வெளியூருக்குச் செல்ல நேர்ந்துவிட்டதாலும், சுலோசனுவுக்கு வயதாகிவிட்டதாலும் இன்னும் கொஞ்ச காலமே பாக்கி இருந்ததாலும் தனது காப்பாளர் பதவியை மற்ருெருவரிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் விலகிக் கொண்டார். மூன்ருவது காப்பாளராகிய மற்ருெருவர் சுலோசனுவின் பிதாவுக்கு ஆப்த நண்பர்! அவர் சுலோசனு சிறுமியாயிருந்த காலத்திலிருந்தே அவர்கள்வீட்டிற்குப் போக்கு வரவு உண்டு. ஆகையினுல் அவரையும், நீங்கிய இருவரையும், தனது குழந்தைகளுக்கு ஒரு காப்பாளியாக நியமித்தார். சுலோசனு வீட்டிற்குப் பணம் கொடுக்கவும் கணக்குகள் கேட்கவும், இன்னும் இதர விஷயமாகப் பேசவும் அந்த மனிதரே நேரில்வந்து விசாரிப்பது வழக்கம்.

மேற்குறித்த காப்பாளர், இருவரும் நீங்கிய பிறகு, அவர்களுடைய சொத்து முழுவதற்கும் தானே தான் காப்பாளி என்கிற ஒரு சிறு அகம்பாவம் அம்மூன்ரும் மனிதருக்கு ஏற்பட்டது. சுலோசனுவின் செலவுகளையும் குடும்பத்தின் செலவுகளையும் கணக்காகக் கவனித்து "இதற்கேன் இத்தனை செலவு

எத்தகைய ஆப்த—உயிருக்குயிரான—சிநேகிதர்களாயினும் காரணமே இல்லாது—ஒருவிதமான மனஸ்தாபமும் இல்லாமலேயே ஒருவரையொருவர் பார்க்காமலும், பேசாமலும், தினம்வரும் கடிதமும் இல்லாமலும் நின்றுவிடும் படியாகச் சில சமயம் நேர்ந்துவிடுகிறது.

செய்யவேண்டும்? இவ்வளவு விலையுயர்ந்த சேலையை ஏன் வாங்க வேண்டும்? இத்தனை பணத்தைக் கொட்டி இந்தப் பொருளை ஏன் வாங்கினாய்?" என்று பலவிதமாகத் திட்டம் செய்யவும் கேள்விகள் கேட்கவும் ஆரம்பித்தான். திடீரென்று இம்மனிதன், தனது சொந்தப் பொருளைத் தன் செலவுக்குக் கொடுப்பதில் இப்படிக் கணக்குக் கேட்க ஆரம்பித்ததை நோக்கி, அவள் மனம் மிகவும் வருந்திற்று. இதுகாறும் பதில் பேசாது பணத்தைக் கொடுத்துவந்த இவன், இப்பொழுது ஏன் இவ்விதம் கேட்கிறானென்கிற பெரிய சந்தேகம் அவள் மனதில் தோன்றிச் சிந்தையைக் கலக்க வாரம்பித்தது. அன்று அவளுடைய காலேஜ் விஷயமான செலவிற்குப் பத்து ரூபாய் அவசரமாக வேண்டியிருந்ததால் உடனே பணம் வேண்டும் என்று ஒரு சீட்டு எழுதி ஒரு வேலைக்காரியிடம் கொடுத்து அனுப்பினாள். அதற்கு அம்மனிதன் பின்வருமாறு பதில் எழுதி அனுப்பிவிட்டான்.

சுலோசனவுக்கு,

உன் கடிதம் வந்தது. நீ கேவலம் தலைகால் தெரியாமல் பணத்தைச் செலவு செய்வதில் எனக்குச் சிறிதும் சம்மதமில்லை. வீணான செலவுகள் செய்து நீயே உன் பிதாவின் பொருள் முக்கால் பாகத்தையும் கரைத்துவிட்டாய். உனக்கு இளையவனாகிய கோபியின் கதி எவ்விதம் போவதென்று நினைக்கின்றாய்? நான் இதுகாறும் இவைகளைப் பற்றிக் கவனிக்காதிருந்ததற்குக் காரணம் இன்னும் இருவர் இருக்கிறார்களே; அவர்கள் பார்க்கட்டும் என்றிருந்தேன். இருவரும் என்னிடமே ஒப்புவித்துவிட்டபடியால் நான் அதிக சிரத்தை

மிகவும் அன்பான சிநேகிதையின் வரவைநோக்கி "இப்பொழுது வருவாள், சற்று பொறுத்து வருவாள், சாயந்திரம் வருவாள், கடிதமேனும் வரும், அல்லது யாரிடமாவது ஏதேனும் செய்தியாகிலும் வரும்!' என்று நிமிடத்திற்கு நிமிடம் எதிர்பார்த்து எண்ணமிட்டுக்கொண்டிருந்து கடைசியில் எதுவுமே இல்லாது ஏமாற்றத்தையடைந்து கண்ணீர் சிந்தும்படியாகவும் சில சமயங்களில் நேர்ந்துவிடுகின்றது.' இது இலவு காத்த கிளியின் கதிபோலத்தான்,

எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நான் நேற்றுதான் உங்கள் விஷயமான கணக்குகளை எடுத்துப் பார்த்தேன். பார்த்ததில் பெருந் தொகையான பல செலவுகளும் கடன்களும் ஏற்பட்டிருக்கின்றன. தற்காலம் தொகை மிகவும் குறைவாக இருப்பதை நோக்கி நான் மிகவும் வருத்தமுற்றேன். நீ இவ்விதம் செலவு செய்துவிட்டுக் குழந்தை கோபியைத் தெருவில் நிற்கவைத்துவிடுவது சரியன்று. ஆகையினால்தான் உனக்கிந்தக் கடிதத்தை எழுதுகிறேன். கோபிக்காதே! ஜாக்ரதையாகச் செலவு செய். அனாவசியமானவைகளுக்குப் பணம் கொடுக்கமாட்டேன். நீ உனது சிறுமித் தனத்தினால் கண்டவற்றிற் கெல்லாம் கணக்கின்றிச் செலவு செய்கிறாய். மேலும் உனக்கு நான் சில முக்கிய விஷயங்களைக் கூற நினைக்கின்றேன். அதனால் உன் மனம் வருத்தமுற்று என்மீது கோபமும் வரலாம். வரினும் என் கடமையைச் செய்வதில் நான் பின்வாங்க இயலவில்லை. நீ சாமளா பிலிம் கம்பெனியில் நடிப்பதாக ஓர் வதந்தி ஊர் முற்றும் உலாவுகின்றது. எத்தனையோ சோதாக் கூட்டங்கள் உன் வீட்டைச் சுற்றி யலைவதை நான் கண் கூடாகப் பார்த்திருக்கிறேன். உன் வீட்டிற்கு அநேக ஆடவர்கள் வருவதாயும் நீ கேவலம் ஹீனமான கார்யத்தில் மதி கெட்டு இறங்கிவிட்டதாகவும் கேள்விப் படுகிறேன். இவைகளைக் கேட்க என் மனம் மிகவும் சங்கடமடைந்து வியசனத்தில் ஆழ்கின்றது. நீ மகா புத்திசாலியாயும் விவேகியாயும் இருப்பாய் என்று நான் எண்ணினேன். நீ இவ்வித அபகீர்த்திக்கு ஆளாகி யிருப்பது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. உன்னுடைய சொந்த மனிதர் என்ற சாக்கை வைத்துக்கொண்டு அந்த வக்கீல் விமலநாதன் வெகு சுதந்தரத்துடன் உன் வீட்டிற்கு அடிக்கடி வருவதாகக் கேள்விப் படுகிறேன். இவ்விதமான நடத்தை சற்றும் நன்று

உயிருக்குயிராகப் பழகுகிற சிநேகிதர்களின் மனம் ஒரே மாதிரியான பாவனையில் எந்த சமயத்திலும் இருப்பதில்லை. அவர்களை அறியாமலேயே —குற்றமென்றறியாமலேயே—மன மாறாட்டமும் சிறிது பிரிவினையும் ஏற்பட்டுவிடுகின்றது.

யில்லை. பெரியோர் அற்ற சிறுமியாகிய நீ மற்றவர்களின் இதோபதேசத்தைக் கேட்டாவது நன்ருக நடக்கவேண்டும். உன்னுடைய சிநேகிதைகளும் உனது இத்தகைய நடத்தையைத் திருத்தாமல் உடனிருந்து துணை புரிகின்ருர்கள் போலத் தோன்றுகின்றது. உனக்குச்சில அனுமதேயக் கடிதங்கள் வந்ததையும் அதனுல்;உனது கலாசாலையில் நடந்த விஷயங்களையும் முன்னரே நான் கேள்விப்பட்டேன். நாமாக அதைக் கேட்கலாகாதென்று இதுவரை பேசா திருந்தேன். இப்போது எல்லாம் மிதமிஞ்சி விட்டதாகத் தோன்றுவதால் நான் உனக்கு எழுத நேரிட்டது. நீயோ பால்ய விதவை; நீ உன் மனம் போன போக்கெல்லாம் போனுல் தற்போது சந்தோஷமாகவே இருக்கலாம். ஆனுல் அதனுல் உனக்குண்டாகும் இழுக்கையும் அவமதிப்பையும் நீ சிறிதும் சிந்திக்கவில்லை. இது சற்றும் நன்ருக இல்லை. உன்னைக் காக்க நீயே யன்றி வேறு யாரு மில்லை. ஆகையால் ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள். உங்கள் பொருள் பெரும்பாலும் செலவாகிவிட்டது. எஞ்சியுள்ளது கொஞ்சந்தான். இதை அறியவும்; அனுவசியமாகப் பணம் கேட்காதே,

இங்ஙனம்.
உன்னலனைக் கோரும்
அண்ணுசாமி.

இக் கடிதத்தைப் படித்ததும் சுலோசன திடுக்கிட்டுப் போனுள். இன்ன செய்வதென்று தெரியாமல் மனம் பல வாருக சங்கடப்பட்டாள். "அந்தோ! இதென்ன அநியாயம். திடீரென்று இம்மனிதன் இவ்விதமான கடிதத்தை எழுதக் காரணமென்ன? நானு அனுவசியமாகப் பணச் செலவு செய்கிறேன். ஐயோ! இதென்ன அக்கிரம வார்த்தை? எங்கள் பொருள் பெரும்

ஒரு பாடலை நாம் அவசரமாகப் பாடம் செய்யவேண்டுமாயின், அப்பாடலைச் சிலதரம் வாயால் சொல்லிக்கொண்டே காகிதத்தில் எழுதினுல், அது உடனே மனப்பாடமாகிவிடும். இது கண்டறிந்த அனுபவம்.

பாலும் செலவாகிவிட்டதாமே. நான் எனது சொந்த விஷயத்தில் செலவு செய்வதற்குக் கூட, இவை எனக்கெதற்கு, இவை அவசியமில்லை, என் பிறவிக்கு இவைதான் பாக்கியா என்று ஒவ்வொன்றையும் வெறுத்து விலக்கிக்கொண்டே வருகிறேனே! அங்ஙனமிருக்க என்னைக் கண்டா இந்த வார்த்தையைக் கூறுவது? ஐயோ! தலைவிதியே! விமலநாதர் இங்கு வருவது ஓர் பெரிய தப்பிதமாகிவிட்டதா! அடாடா! அநியாய உலகமே! அக்கிரம உலகமே! நான் சினிமாவில் நடிப்பதும் என்னைச் சுற்றி சோதாக்கள் அலைவதுமான அபவாதங்கள் இன்னுமா என்னை விட்டு அகலவில்லை? என் விதியின் கொடுமை என் வாழ்வை அடியோடு மடித்துவிட்ட பிறகும் விடாது போன்றிருக்கிறதே. ஆகா! நானு ஹீனத் தொழில் புரிகின்றேன், துன்மார்க்கமாய் நடக்கின்றேன்! இச் சுடுசொற்களால் என் ஆவி துடிக்கின்றதே யன்றிப் பிரிந்துவிடவில்லையே. ஹா! என்ன ஜன்மமெடுத்தேன். பாவி பிறப்பினால் நான் அடைந்த பயன் இதுதானோ! இதுதானோ!

நல்லவை கண்டிலேன் நாதனை நோக்கிலேன்
அல்லலுக்காக நான் அவனியிற் பிறந்துளேன்
எல்லையிலாபல தொல்லைகள் அணுகினும்
அல்லினுங் கொடியவென் ஆயுள் நீங்கிற்றிலையே

* அல் = விஷம்

இதற்கோ பெண் பிறந்தேன். ஈசா! உன் திரு உள்ளம் இதுதானோ? பேதையான என்னைப் பரிசோதித்து வீணாக வாட்டுவதைவிட என்னுயிரை உன் பொன்னடியில் சேர்த்துக் கொள்ள இன்னும் தாமதமா? அன்றி பின்னர் யான் செய்த கன்ம வினையா இது? உனது மனம் இளகாததேன்? பாவ வினையின் கொடுமையா. ஐயோ! என்னசெய்வேன். பிறந்த நாள் முதலாக—அறிவு தெரிந்த அந்நாள் முதல் துன்பமும் கண்ணீருமின்றி வேறு இன்ப

தாம் கடிதம் எழுதுவதற்கு மட்டும் நாட்கணக்கும் மாதக் கணக்குமாகத் தாமதமாகிறது. தாம் மட்டும் பதிலை மறு நாளே எதிர் பார்த்திருக்கிறார்கள். இது சிலருடைய சுபாவம்.

மேலும் நான் காணவில்லையே! முப்பத்து முக்கோடி ஜீவராசிகளில்
சகல விதத்திலும் கழிபட்ட—உதவாத—அமங்கலமான—அரு
தையான—பாவி நான் ஒருத்திதானா? எனக்கு இவ்வுலகில்
இருக்க இட மிருந்தும் ஒன்றுக்கும் உதவாத குப்பையாகி விட்
டேனே! ஹா! விதியே, விதியே!' என்று தனக்குள் மிகவும் குழம்
பிக் கண் கலங்கினாள். தாங்கமாட்டாத சோகத்தினால் கதறினாள்.
அப்படியே குழம்பிப் போய் கண்ணீர் ஆறாய்ப் பெருகச் சோர்
வடைந்து அயர்ந்தாள்.

அத்தருணம் வீதிக் கதவை யாரோ தட்டும் சத்தம்
கேட்டது. உடனே தன் கண்களைத் துடைத்துக்கொண்டு வீதிக்
கதவைத் திறந்தாள். அப்போது சுலோசனா சற்றும் எதிர் பாராத
விதம் விமலநாதனுடைய பெற்றோர்கள் அங்கு வந்தார்கள். அவர்
களைக் கண்டு மெத்த மகிழ்ச்சியடைந்த சுலோசனா தன் துயரத்தை
அடக்கிக்கொண்டு "வாருங்கள், வாருங்கள்" என்று வெகு பிரியத்
துடன் அழைத்துவந்தாள். இருவரையும் நமஸ்கரித்தாள்.
மூட்டை, பெட்டி, படுக்கை முதலியவற்றை வேலைக்காரியைக்
கொண்டுவந்து உள்ளே வைக்கச் செய்துவிட்டு வென்னீர் போடச்
சொன்னாள். சமயல் செய்ய நியமித்துவிட்டு, பிறகு அவர்களை
நோக்கி "என்னுடைய இன்றையபொழுது—நான் விழித்த நேரம்
வெகு நல்ல நேரமென்று நினைக்கின்றேன். எல்லோரும் சௌக்
யமா! விமலநாத மாமா சௌக்யமா! அவர் வரவில்லையா? குழந்தை
நன்றாக இருக்கிறதா?" என்று அடுக்கடுக்காக விசாரித்தாள்.

அந்த வீட்டில் ஜானகியின் புருஷன் இறந்தபிறகு இன்றே
அவளுடைய பெற்றோர்கள் வந்திருப்பதால், அளவற்ற வியசன
மும் பழங்கால நிகழ்ச்சிகளும் நினைவிற்கு வந்துவிட்டன. "பெற்ற
மனம் பித்து" என்பதுபோல ஜானகியின் தாயார் புலம்ப ஆரம்

மிகவும் நேசமான சிநேகிதையைப் பார்க்காத நாட்களில் குறிப்பு எழுது
வதும், இன்றோடு நான்கு நாட்களாயின; இன்று சேர்ந்து ஆறு நாட்களா
கின்றனவென்று கணக்கெண்ணிப் பார்த்துக் கண் கலங்கி உள்ளம் உருகி
ஏக்கமடைந்து வாடவும் சில சமயம் நேர்ந்துவிடுகின்றது.

பித்துவிட்டாள். "என் கண்மணி! சலோசனா! உனது பிதா இறந்த காலத்தில் நான் இவ்வீட்டைப் பார்த்தவள். அதற்கப்புறம் இன்றே இங்கு கால் வைத்தேன். ஆகா என்ன வேடிக்கை: என்னருமை ஜானகியை நாங்கள் எத்தனையோ செல்வமாக வளர்த்து இங்கு விவாகம் செய்து கொடுத்ததும், பிறகு ஒரு குழந்தையின்மையின் காரணத்தால் அவள் சிறுமையடைந்து வருந்தியதும், அதன்பின் உன் தாயாரை மறுமணம் செய்வித்ததும் அவள் வந்த பிறகு என் ஜானகியின் கதி அதோகதியானதும், பிறகு ஒருவேளைச் சோற்றிற்கு ஜானகி இளையவளிடம் நடுங்கித் தவித்ததும், உன் பிதாவின் காலத்திற்குப் பிறகு அவள் என் வீட்டிற்கு விரட்டப்பட்டதும், அப்புறம் உன்னுடைய தீராத தலைவிதியைக் கேட்டதும் உன் மேல் வைத்திருந்த அவளுடைய பிராணனையே மாய்த்துக்கொண்டதும்—ஆகா! இவையாவும் இப்பொழுது என் கண் முன்பு நடைபெறுவது போலிருக்கின்றனவே! ஐயோ! என் ஜானகி! நீ நன்றாக இருந்து நான் உன் வீட்டிற்கு ஒருபோதும் வந்ததில்லையே, நீயும் மாண்டு உன் குழந்தையும் இக் கதிக் கிலக்காகி விட்டபிறகு நான் இங்கு வரும்படியாக நேர்ந்ததே! என்ன காலக் கொடுமை! சலோசனா! உன்னுடைய அமிர்தம் போன்ற குணங்களின் காந்தம் எங்களை இப்படி இழுக்கின்றது. வெட்கம் துக்கம்! இரண்டையும் மறந்து இங்கு வந்து சேர்ந்தோம்; விமலநாதன் குழந்தைக்கு ஏதோ உடம்பு சரி இல்லை என்று கடிதம் வந்தது. அதனால் குழந்தையைப் பார்க்க வந்தோம். குழந்தை சற்று குணமடைந்திருக்கிறது. இப்படி வந்து உன்னைப் பார்த்துவிட்டு வீட்டிற்குப் போவோமென்று இங்கு வந்தோம். ஏனம்மா! உன் முகம் ஏதோ வருந்தியது போலிருக்கின்றதே! என்ன காரணம்" என்று கேட்டு மிகுந்த அன்புடன் சலோசனாவைக் கட்டித் தழுவிக்கொண்டாள்!

இந்த வரலாற்றைக் கேட்ட சலோசனா ஏற்கனவே வருந்திக் கொண்டிருந்தாளாதலால் இன்னும் அதிகமாகக் கண்ணீர் பெருகி

"ஆஹா! நமது உயிருக்குயிரான சிநேகிதை இவ் வழியாகச் சென்றும் நம் வீட்டிற்கு வரவில்லையே!' என்கிற துக்கம் இருதயத்தைப் பிளக்கின்றது. மனதில் சங்கடத்தைப் பெருக்குகின்றது. இவ்விதமான ஒரு கரை காணாத பாசம் அவள் மனதிலுமிருக்குமாயின்..................................

விட்டது. அந்த துக்கத்துடன் சுலோசனா பேசத் தொடங்கி "பாட்டி! இத்தகைய மகா துக்ககரமான சம்பவங்கள் நடந்ததற்கெல்லாம் மகா பாவியாகிய என்னுடைய துரதிர்ஷ்டந்தான் காரணமென்று நான் திட்டமாகக் கூறுவேன். எனக்கு நல்ல அதிர்ஷ்டம் இருக்குமாயின் என்னை ஈசன் என் மூத்த அன்னையாரின் வயிற்றில் ஜனிக்கச் செய்திருக்கமாட்டாரா! அதுதான் தொலைந்ததென்றால் என் பிதா இன்னும் சில காலம் உயிருடன் இருக்கமாட்டாரா! அது போகட்டும். என் அன்னையின் மதி யழிந்து என்னை இவ்விதம் கொலை செய்துவிட வேண்டுமோ? அதுவும் போகட்டுமென்றால் என் பெரிய அன்னையார் இறக்கவேண்டுமோ? பேயானாலும் தாய் என்பார்கள். அவளும் ஒழிந்து என்னை அனாதையாக்கிவிட வேண்டுமோ? இவைகளையெல்லாம் நோக்கின் என்னுடைய மகா கொடிய வினைதான் இவைகளுக்குக் காரணமென்று ஏற்படுகிறது. என்னுடைய பாப ஜன்மத்தைக் கண்டு நீங்களும் விலக்கிவிடாது, அன்புகொண்டு இங்கு வந்ததே பெரிய சந்தோஷம். என்னுடைய பிறவியில் இந்த ஒருவிதமான சந்தோஷமாயினும் இருக்கும்படியாகக் கடவுள் செய்திருப்பதுதான் எனக்குப் பெரும் மகிழ்ச்சி; வாருங்கள். ஸ்நானம் செய்துவிட்டு போஜனம் செய்யலாம்" என்று உபசரித்தாள்.

பிறகு இருவரும் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு போஜனத்தை முடித்துக்கொண்டு சிறிதுநேரம் படுத்து இளைப்பாறினார்கள். அதன் பின் மாலை நான்கு மணிக்கு அவர்களை யழைத்துக்கொண்டு ஓர் வண்டியில் 'லால்பாக்' என்னும் தோட்டத்திற்குச் சென்றாள். சுலோசனா அவர்களுடன் எவ்வளவு சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று முயன்றாலும் அன்று வந்த கடிதத்திலிருந்த விஷயத்தின் நினைவே அவள் மனதில் தோன்றி வருத்திக்கொண்டிருந்ததாகையால், முகத்தில் திடீர்! திடீர்! என்று மாறுதல்கள் காணப்பட்டன. தோட்டத்திலுள்ள அலங்காரங்

உலகானுபவங்களை நன்றாகக் கண்டறியவேண்டுமானால் வம்புக்காரப் பாவிகளையும், கலகக்கார குண்டுணிகளையும் நான்கு நாட்கள் வீட்டில் வைத்துக் கொண்டிருந்தால் போதும்.

களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு அங்கு பிரத்யேகமாக அமைக்கப் பட்டிருந்த ஓராசனத்தில் எல்லோரும் அமர்ந்தார்கள். அங்குள்ள விநோதங்களைக் காண வந்திருந்த ஜனங்கள் தத்தம் போக்காக ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் நாலைந்து தடியர்கள் உட்கார்ந்து சுலோசனாவைப் பார்த்தபடியே ஏதேதோ அவ்வூர் கன்னட பாஷையில் பேசிக்கொண்டிருந்தார்கள். இவைகளை யெல்லாம் செவி மடுத்த சுலோசனாவின் மனம் தத்தளித் தது. "அவர்கள் பேசிக்கொள்வது இவர்களுக்குத் தெரிந்து விடப் போகின்றதே! என்ன செய்வேன்?" என்று தபித்தாள். விமல நாதனின் பெற்றோர்கள் முன்னர் இதே ஊரில் இருந்தவர்களா கையால் அவர்களுக்குக் கன்னட பாஷை நன்றாகத் தெரியு மெனி னும், அவர்கள் அந்தத் துஷ்டர்களின் பேச்சைக் கவனிக்காது சுலோசனாவுடன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அப் பொழுது சுலோசனாவின் போஷகராகிய அண்ணாசாமி என்பவர் அங்கு வந்தார். அவ்விடம் சுலோசனாவும் மற்றையோரும் இருப் பதைக் கண்டு கிட்டி வந்தார். அவரைக் கண்டதும் சுலோசனா வுக்கு வெறுப்பும் கோபமும் உண்டாகிவிட்டது. அவள் சரி யானபடி பதில் பேசாது 'வாருங்கள்' என்று மட்டும் கூறிவிட்டுப் பேசாதிருந்தாள். விமலநாதனுடைய பெற்றோர்களை அண்ணா சாமி ஏற்கனவே பார்த்திருக்கிறாை கையால் தானாக அவர்களிடம் உரையாடத் தொடங்கி "என்ன சௌக்யமா! ராமஸ்வாமியின் காலத்திற்குப் பிறகு உங்களை நான் பார்க்கவே இல்லை. ஏது இப்படி வந்தது. ஐயோ! பாவம் ஜானகி யம்மாளும் இவ் வுலகத்தை விட்டுச் சென்றுவிட்டார்களே! என்ன கஷ்டம் பாவம். எல்லா விஷயங்களும் கனவு கண்டதுபோலாய் விட்டன. இரு குழந்தை களும் இரு அனாதைப் பக்ஷிகளாக நின்றுவிட்டார்கள். ஆதரிப்

சிலரிடம் ஒரு காரியத்தைச் செய்யும்படியாகக் கூறினால் அதைக் கட்டா யம் மறந்துவிடுகிறார்கள். தெரிவிக்கக்கூடாத முக்கிய விஷயங்களையும், அனா வசியமானவற்றையும் மனஸ்தாபத்தை வளர்க்கக்கூடிய செய்திகளையும் தாமா கவே தெரிவித்துவிடுகிறார்கள். இதுவும் ஒரு வேடிக்கை.

பாரற்ற இக் குழந்தைகளுக்கு உங்கள் உறவேனும் கிடைத்தது மிகவும் சந்தோஷம். ஏதோ நீங்கள் எல்லோரும் சேர்ந்து இவர்களை முன்னுக்குக் கொண்டுவந்து விட்டால் போதும்" என்று மிகுந்த அன்புடையவன் போலக் கூறினன்.

இதைக் கேட்ட அவர்கள் மிகவும் மரியாதையாகப் பேசத் தொடங்கி "வாருங்கள், உட்காருங்கள், ஏதோ சென்றகால வர்த்தமானங்கள் ஒரு கதையாகிவிட்டன. இனி அவற்றை நினைத்து வருந்துவதில் என்ன பயன்? ஏதோ இக் குழந்தைகளேனும் நல்ல புத்திசாலிகளாயும், தீர்க்காயுளுடனும் இருந்தால் போதுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. நீங்கள் தான் இவர்களைக் காப்பாற்றவேண்டும். "அனுதை. அனுதை" என்று உலகில் கூறுவதுண்டு. இவர்களைப் போன்ற அனுதைகளை நாங்கள் எங்குமே கண்டதில்லை. இவள் கதிதான் இவ்விதம் ஆயிற்று. கோபிநாதனுக்காகிலும் நல்ல இடத்தில் பெண் தேடி விவாகம் செய்துவிட்டால் அதனுல் அவனுக்கு ஒரு ஆதரவு ஏற்பட்டுவிடும். பிறகு சற்று விசார மற்றிருக்கலாம்" என்றுர்கள்.

அண்ணுசாமி:—ஆமாம். ஆமாம். எனக்குக் கூட அந்த யோசனை தான் வெகு நாளாக மனதில் இருந்து வருகின்றது. அதைத் தக்க சமயத்தில் வெளியிட நினைத்திருந்தேன். இப்போது நீங்களாக பிரஸ்தாபித்தமையால் நானும் சொல்கிறேன். என்னுடைய பெண் மிகவும் ரூபவதியாயும் புத்திசாலியாயு மிருப்பதால் அவளையே நமது கோபிநாதனுக்குக் கொடுப்பதென்று நிச்சயித்து விட்டேன். அவனுக் கென்றே அவள் வளர்ந்து வருகிறுள். "கோபிநாதனை மணந்து கொள்கிறுயா?" என்று கேட்டால் அவள் மிகவும் ஆசையுடன் பதிலளிக்கின்றுள். ஆகையினுல் பெரியார்களாகிய நீங்கள் யாவரும் இக் காரியத்தை முடித்துவைக்க வேண்டும்" என்றுர்.

கையில் பணமில்லாத சமயத்திலேயே மிகவும் தாக்ஷிண்யப்பட்டவர்கள் கடன் கேட்கிறுர்கள். இல்லை என்ற வார்த்தையைக் கூறமாட்டாமல் தத்தளிக்கவேண்டி நேர்ந்துவிடுகிறது. நமது நிலைமையை அறிந்து அவர்களே பேசாது போய்விடக்கூடிய சமயமும் சில சந்தர்ப்பங்களில் வாய்க்கின்றது.

இந்த வார்த்தையைக் கேட்ட சலோசனாவுக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. இத்தனை யோசனைகளும் செய்துகொண்டு தான் நமக்கு இத்தகைய கடிதத்தை எழுதினான் போலிருக்கிறது. உம். இருக்கட்டும். கடவுளின் செயல் எப்படி இருக்கின்றதோ. அதை மாற்ற யாராலாகு மென்று தன் கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு சாந்தமாக இருந்தாள்.

விமலநாதன் தந்தை.—ஆகா! நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான். அவ்விதமே செய்யலாம். ஆதிமுதல் நீங்களே காப்பாளியாக இருக்கின்றீர்கள். அவ்விதமே கடைசிவரையிலும் நீங்களே அவனைக் காப்பாற்றி ஒரு வழி காட்டிவிடுங்கள். உங்கள் யோசனை மிகவும் சரியானதே. கல்யாணம் செய்யாமல் வளருகிற தங்கள் பெண் கலியாணமாகி வளரட்டுமே, அதனால் என்ன. ஒருவருக்கொருவர் அன்பும் சிறு பிராயத்திலிருந்தே வளர்ந்து வேரூன்றிவிடும்; ஒத்த மனத்தினராக இல்லறம் நடத்துவார்கள். இவர்களின் தந்தைக்கு என் ஜானகியை சிறு பிராயத்திலேயே மணம் செய்து வைத்தேன். அப்படியே அவனுக்கும் நடக்கட்டும். ஏனம்மா, சுலோசனா! உன்னிஷ்டம் யாது?

சுலோ.—தாத்தா! எனக்குமேல் உள்ள பெரியவர்களாகிய உங்களுடைய இஷ்டத்திற்குமேல் எனக்கென்று வேறு எண்ணம் இருக்க முடியுமா? உங்கள் விருப்பம்போலச் செய்யுங்கள். ஆனால் பையன் சிறியவனாயிற்றே! இதற்குள் விவாகத்திற்கு என்ன அவசரம் என்று தோன்றுகின்றது.

விமலநாதன் தாயார்.—அம்மா! உங்களுடைய திக்கற்ற தன்மையைக் கருதி அவனுக்கு விவாகம் செய்வது நலமென்று தோன்றுகிறது. பையன் சிறியவனாயின் என்ன. நாளையே வளர்ந்துவிடுகிறான். இவரும் நெடுநாளைய சிநேகிதர். இவருடன்

சிலர் நினைத்தமாத்திரத்தில் ஒரு காரியம் கைகூடிவிட்டால் பேசாதிருக்கிறார்கள். இல்லையேல் இனி அக்காரியம் நடைபெறுவதேது, தீர்ந்துவிட்டதென்று ஆத்திரப்பட்டுக் கூச்சலிடுகிறார்கள். அதே காரியம் பிறகு கைகூடும்போது முன்போலக் குதூகலமாகக் குதிக்கின்றார்கள்.

சம்பந்தம் செய்வது மிகவும் சிறந்ததுதானென்று எங்களுக்குத் தோன்றுகிறது. உன் மனதிற்குச் சம்மதமில்லாத காரியமாயின் விட்டுவிடு.

அண்ணாசாமி.—உம். அவள் என்ன தடங்கலாகக் கூறப்போவது ஒன்றுமில்லை. நாம் எல்லோரும் எப்படிச் சொல்லுகிறோமோ அப்படிக்கேட்பாள். அவளுக்குமேலுள்ள பெரியவர்களாகிய நீங்கள் ஏற்பாடு செய்தால் வேண்டாமென்று ஒருபோதும் அவள் சொல்லமாட்டாள். அவளும் சிறியவள்தானே! அவளுக்கும் நீங்கள் நல்ல வார்த்தைகளும், புத்திமதியும் கூறவேண்டும். உலகம் மிகவும் கெட்டுப்போய்விட்டது. நல்லவர்கள், கெட்டவர்கள் என்கிற பேதமின்றி வார்த்தைபாடி விடுகிறார்கள். சுலோசனாவைப் பற்றி உலாவும் அனியாயச் சொற்களுக்கு அளவில்லை; என்ன செய்வது; இக்காலத்தின் போக்கு இவை. அவற்றைக் கேட்கும் போது வயிறு எரிகின்றது. நாம் அவளுக்கு வேண்டியவர்களாகையினால் நல்லது கூறுகின்றோம். உம்....அவை கிடக்கட்டும். தற்போது இந்தக் கல்யாண காரியத்தைப் பூர்த்திசெய்யும் வழியைத் தேடுங்கள்.

வி—தா.—இந்த வீண் பழிச் சொற்களை யெல்லாம் கேட்கும் தலைவிதி இருந்தது போலும். அவ்வாறு ஜனங்கள் அபாண்டமான வார்த்தைகளை வாய்த்திமிர் பிடித்து கூறிவிட்டார்களானால், அது உடனே இவர்களைப் பிடித்துக்கொள்ளுமா? ஒன்றுமில்லை; வாய் வீணர்கள் எதுவேண்டுமானாலும் அளக்கட்டும். எல்லோருக்கும் பொதுவாகவுள்ள தெய்வம் இருக்கின்றதல்லவா? அது அவர்களைக் கவனித்துக்கொள்ளுகிறது. விவாக விஷயத்தை நன்கு யோசித்துச் செய்வோம். இப்போது சூனியமாதத்தில் அந்தப் பேச்சே வேண்டாம்'' என்றாள்.

யாசகமாகப் புத்தகம் கேட்கும் தந்திரிகள் "உங்கள் புத்தகங்களை நாங்கள் வாசித்துவிட்டு வாளா வைப்பதில்லை. பலருக்கும் கொடுத்துப் பாவசெய்கிறோம். இதுவும் உபகாரமல்லவா?'' என்கிறார்கள். இதனால் புத்தகம் விலையாகாமல் நின்றுவிடும் கஷ்டத்தை அவர்கள் அறிந்தார்களா! அதைத் தான் காணவில்லை.

பிறகு அண்ணுசாமி ஏதோ சில வார்த்தைகள் பேசிவிட்டுப் போய்விட்டான். விமலநாதன் தாயார் சுலோசனுவை நோக்கி "அம்மா! சுலோசனு! உனக்கென்று ஆதரிக்க ஒருவருமில்லாத இவ்விடத்தில் நீ தனியே வசிக்கவேண்டாம். உனக்கு எப். ஏ., (F.A.,) படிப்பும் இந்த வருஷத்துடன் முடிந்துவிடுகின்றது. அதற்குமேல் நீ சென்னைக்கு வந்து எங்களுடைய துணையில் இருந்துகொண்டு உன் விருப்பப்படி டாக்டர் பரீக்ஷைக்குப் படிக்கலாம். இங்கு நீ தனியாயிருப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை. இந்தப் பரீக்ஷையை இங்கு பாஸ் செய்துவிட்டு, உடனே அங்கு வந்துவிடுவதுதான் உசிதம். உங்களுக்குள்ள ஏராளமான செல்வத்தில் ஒரு "பேபி ஆஸ்டின் கார்" (Baby Austin Car) வாங்கிவிடு. நீயும் கோபியும் கலாசாலைக்குப் போவதற்கும் வருவதற்கும் அனுகூலமாகவிருக்கும். வம்புக்கார ஜனங்களின் மத்தியில் உலாவுவது மெத்த கடினம். உனக்கோ இங்கு ஏனென்று கேட்பாரில்லை. நீயோ மகா சாது. ஆகையினுல் பாழும் ஜனங்கள் உன்னைப்பற்றி ஏகதேசமாகச் சொல்வது சகஜந்தான். உனக்கு இஷ்டமிருப்பின் எங்கள் வீட்டிலேயே இரு. அப்படிச் சம்மதமில்லையென்ருல் எங்கள் பங்களாவிற்கு அருகில் உனக்கு ஜாகை பார்த்துத் தருகிறேன். அதில் நீ இருக்கலாம். கட்டாயமாய் அங்கு வந்துவிடம்மா!" என்று மிகுந்த அன்புடன் உரைத்தாள். சுலோசனுவும் தான் யோசித்துப் பதில் கூறுவதாக பதிலளித்தாள்.

அதன்மேல் நன்ருக இருட்டிவிட்டதால் எல்லோரும் புறப்பட்டு வீடுவந்து சேர்ந்தார்கள். அன்றிராப்பொழுதையும் ஏதேதோ பேசியவண்ணம் கழித்தார்கள். விமலநாதன் பெற்ருேர்கள் பின்னும் இரண்டு நாட்கள் இருந்துவிட்டு, பிறகு தம்மூர் போய்ச் சேர்ந்தார்கள். சுலோசனுவுக்குத் தான் இங்கிருப்பதா, அன்றிச் சென்னைக்குச் செல்வதா என்கிற யோசனை மனதில்

துரதிருஷ்டம் என்பது ஒருவரைப் பற்றினுல் பலவிதத்திலும் விடாது தாக்கிப் படாத பாடு படுத்தி விடுகிறது. எந்த விஷயத்திலும் எந்த நோத்திலும் அவர்கள் கதி துரதிருஷ்டமாகவே முடிகின்றது. அதிர்ஷ்டமென்பது எப்போதோ தெரியவில்லை.

போராடத் தொடங்கிற்று. அதோடு தனது கோபியின் கல்யாண விஷயமான பெரிய கவலையும் அவளை வாதித்துக்கொண்டிருந்தது. அண்ணுசாமி என்பவன் மிகவும் சிக்கனம் செய்து பணத்தைக் கொடுப்பதையும் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்து, செலவுவகைகளைப்பற்றியும் கண்டிக்கத் தலைப்பட்டான். இந்தக் கஷ்டத்தில் சுலோசனுவின் மனம் மிக்க வருத்தமடைந்து தவித்தது. இவ்விஷயத்தைப் பிறரிடம் கூறவும் முடியாமல் சிலகாலம் பொறுத்து வந்தாள். அண்ணுசாமியே அடிக்கடி சுலோசனுவின் வீட்டிற்கு வருவதும், வெகு கவனத்துடன் விசாரிக்கும் பாவனையோடு நடிப்பதும், அவளுடைய செலவுகளைக் கவனித்துக்கொள்வதுமாக ஆரம்பித்தான்.

இச்செய்கை சுலோசனு மனதிற்கு மிக்க வெறுப்பையும் விசனத்தையும் விளைத்தது. "ஐயோ! நமது தந்தையின் செல்வத்தை நமக்களிப்பதற்கு இவ்விதம் சங்கடப்படுவாரும் உண்டோ! இதுவும் ஒரு சோதனையா?" என்று மிக்க மனவருத்தமுற்று வீற்றிருக்கும் சமயத்தில் அண்ணுசாமி அவ்விடத்திற்கு வந்தான். சுலோசனுவின் விசனகரமான தோற்றத்தைக்கண்டு "அம்மா சுலோசனு! ஏன் வருத்தப்படுகிறுய்? உனக்குள்ள வருத்தம் இன்னதென்று என்னிடம் தெரிவிக்கலாகாதா? நீயே மனதில் வைத்துக்கொண்டு சதா உருகித் தவிக்கின்றுயே! நான் உன்னுடைய கணக்குவழக்குகளை எல்லாம் கேட்கின்றேனென்று என் மீது உனக்குக் கோபமிருக்கலாம். அதனுல் ஒன்றுமில்லை. நீ கோபித்துக்கொண்டால் நான் கேட்கலாகாதா! அதொன்றுமில்லை. உன் தந்தை எங்கேயோ வாங்கியுள்ள நிலங்கள் சிறிதும் சில வருஷங்களாக மழையின்மையால் விளைச்சலின்றி அடியோடு நாசமாகி விட்டன. அதற்குத் தீர்வைக் கட்டணத்தை நான் கையிலிருந்து பணங்கொடுத்துக் கட்டிவருகிறேன். மேலும் உங்களுக்கு மற்

எந்த நேரத்திலும் சிந்தையில் கவலையே கொண்டு உழல்பவருக்குப் புதிது புதிதாகக் கவலைகளே வந்துற்று வருத்துகின்றன- தீராத கவலையும் மாளாத துயரமும் நீங்காத கண்ணீரும் துணையாய் விடுகின்றன. இது வாழ்வினை தானே?

ஞெருரு காப்பாளியாகவிருந்து சமீபத்தில் காலம் சென்ற மனிதர், இந்தப் பணத்தை மிகவும் கையாடல் செய்துவிட்டார். அதை நான் சமீபத்தில்தான் அறிந்தேன். இப்போது இதைவிட்டு விலகிக் கொண்ட மனிதனும் அவருக்கு உள்கையாகவே இருந்து வேலை செய்திருப்பதாகத் தெரிகின்றது" என்று அவர் சொல்லி முடிக்கு முன்னர் சுலோசனு சிறிது ஆத்திரத்துடன் பேசத்தொடங்கி "என்ன இது? அந்த மனிதர் பணத்தை கையாடிவிட்டாரா? இதென்ன ஆச்சரியமான வார்த்தை! இதை நான் ஒருநாளும் நம்பவே முடியாது." என்ருள்.

அப்போது அண்ணுசாமி ஒருவிதமாக நகைத்துக்கொண்டே "பேஷ்! சுலோசனு! உன்னுடைய ஆவேசமான மொழியை இன்று தான் கேட்டேன். இதென்ன உனக்கு இவ்வளவு கோபம் வந்து விட்டதே" என்று சொல்லிக்கொண்டே சுலோசனுவினருகில் சென்று அமர்ந்தார். இவர் பார்வையையும், இங்ஙனம் நெருங்கி யுட்கார்ந்ததையும் கண்ட சுலோசனுவிற்கு, அருவருப்பும் கோபமும் பொங்கி எழுந்தது. "ஐயோ! இந்த மனிதரின் பார்வை பரிசுத்தமானதாக இல்லையே. இதென்ன விபரீதமோ தெரியவில்லையே!" என்று கலக்க மடைந்து ஸ்தம்பித்துப் போய்விட்டாள்.

* * * *

பரிமளா தான் புக்ககம் சென்றிருந்த நாளிலும் அவள் நாயகன் அவளை அதிக அன்பு பாராட்டி நடத்தாது, ஏதோ தலைவிதியே என்று கேட்ட கேள்விக்குப் பதிலும், மற்ற வேளையில் மௌனமும் சாதித்து வந்தான். இப்போது பிறந்தகம் சென்றிருப்பதால் அவன் வந்து முகத்தைப் பார்ப்பதும் பஞ்சமாகி விட்டதே யென்று ஆற்ற முடியாத துக்கமும் மனக் கவலையும் பரிமளா

நிரம்பவும் இனிமையாயும் மனமொருமித்தும் பேசிப் பொழுதைக் கழிக்கும் இடத்திலேயே சில சமயம் நிற்கவும் பிடித்தமில்லாது பேச்சும் ரஸமற்று விடுகிறது. வீடு திரும்பிவிடவே மனம் தூண்டுகின்றது. இது வேளையின் கூற்று போலும்.

விற்கு அதிகரித்துவிட்டது. குழந்தை பிறந்து ஏழு மாதங்களா யின. ஆகையால் இனிமேல் தான் புக்ககம் செல்லவேண்டுமென்று அவள் தன் தாயுடன் பிடிவாதமாகக் கூறி ஒற்றைக் காலால் நிற்கலானாள்.

அதற்கவள் தாயார் "அம்மா! உன்னை உன் புக்ககத்தில் அழைக்காமல் நான் எவ்விதம் கொண்டுபோய் விடுவேன். உன் புருஷனோ குழந்தை பிறந்தநாள் முதல், இந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. உன் மனம் ஆவல் கொண்டலைவது போல அங்கும் இருந்தாலன்றோ நன்றாயிருக்கும். உன் புருஷனிடத்தில் எனக்கென்னவோ சந்தேகந்தான். அதைச் சொன்னால் உன் தந்தை என்மேல் புலி போல் பாய்கின்றார்; நான் என்ன செய்வேன்?" என்று கூறினாள். தன் தாய் கூறியவை நியாயமாகப் பட்டபடியால் பரிமளா வேறொன்றும் பேசவில்லை. தன் கணவ னுக்குத் தானாகவாவது ஒரு கடிதம் எழுதிப் பார்ப்போம் என்று தீர்மானித்து, கடிதமொன்று வரைந்து அன்றே தபாலில் சேர்த்து விட்டு, அதற்குப் பதிலை எதிர்பார்த்த வண்ணமிருந்தாள்.

விமலநாதன் கோர்டு விஷயமான காரியங்களைக் கவனிப் பதும், மற்ற வேளையில் ஒரு பித்தனைப் போற் கிடப்பதுமாக இருந்து வந்தான். தனது பெற்றோர்கள் பெங்களூருக்குப் போய் சுலோசனாவைப் பார்த்துவிட்டு வரப்போவதாகக் கூறிச் சென்றது அவனுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. அவன் அவ்வாறே பார்த்துவிட்டு வரும்படியாக அவர்களுக்குச் சொல்லி யனுப்பி விட்டான். அவர்கள் சுலோசனாவைப் பார்த்துவிட்டு வந்ததும் தனக்கு எவ்விதமான பதில் கூறிவார்களோ வென்று அவர்கள் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பெற்றோர்களும் ஊருக்குச் சென்று திரும்பினார்கள். அவர்களைக் கண்ட விமல நாதன் வெகு ஆவலுடன் "அம்மா! சுலோசனா எவ்வித மிருக்

சதாகாலமும் ஆனந்தமடையவேண்டுமென்றே சகலரும் கோருகின் றார்கள். அத்தகையோருக்கே தினந்தோறும் தாம் எதிர்பாராதவிதமான வருத்தங்கள் எங்கிருந்தோ முளைவிட்டுக்கொண்டே இருக்கின்றன.

கிருள்! உங்களை நன்ருக விசாரித்தாளா! அவள் தேக சுக மில்லா திருக்கிருளா! என்ன விசேஷம். என்ன சொன்னுள்" என்று அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டான்.

வி....தாயார்:—அப்பா! விமலநாதா! அந்த அனுதைப் பெண்ணை நினைத்தால் என் வயிறு பற்றி எரிகின்றது; மனம் பதைக்கின்றது; தாங்கமாட்டாத துக்கம் வருகிறது. உலகத்தில் இனி சுலோசனுவைப் போன்ற தங்கக் கிளி கிடைக்கவே கிடைக் காது. எவ்வளவு அன்புடன் எங்களை உபசரித்தாள் தெரியுமா? எங்களை ஊருக்கு அனுப்ப அவள் மனமிசையவே யில்லை. விட மாட்டேனென்று மன்ருடினுள்; அந்தக் கண்மணியைப் பிரியுங் காலத்தில் நாங்கள் கண்ணீர் விட்டுவிட்டோம்; அவளும் கதறி விட்டாள். வரவேண்டுமே யென்று வந்தேன். அவளை இனி தனிமையில் விட எனக்குச் சிறிதும் இஷ்டமில்லை. நம்மோடு கூட இங்கேயே வந்து இருந்து விடும்படி அவளை நான் அழைத்தேன். பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று கூறிவிட்டாள்.

விமல:—அப்படியா! நீங்கள் அழைத்தீர்களா! வருகிறே னென்று கூறினுளா? ஐயோ பாவம்! அவ்விருவரும் தனி வாசம் செய்வது மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. என்ன செய்வது? பாவம் இப்போது அவளுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?

வி....தாயார்:—இருப்பது என்ன! முன்போலத் தான் அடிக்கடி மயக்கம் வந்து அப்படியே தன் நினைவற்று விழுந்து விடுகிருள். அந்தக் கண்ராவியைப் பார்க்க மிக்க சங்கடமாயிருக்கிறது. நாங்கள் இருந்த சொற்ப நாட்களுக்குள் அநேக தரம் மயக்கம் வந்துவிட்டது. அதனுல் தான் நான் அவளைக் கட்டாயமாக இங்கு வந்துவிடும்படி அழைத்தேன். கவனிப்பாரற்று இப்படி

சிலவருஷங்கள் வீட்டில் கூடவேயிருந்து பழகிவிட்டமனிதர்கள் யாராகி லும் வீட்டைவிட்டுப் பிரிந்துவிடுவதென்ருல் மனது சஞ்சலமடைகின்றது. வருந்திக் கண்ணீரும் வந்துவிடுகின்றது. வேற்று மனிதர்கள் வந்து அவர்க ளிடம் மனம் ஒருமித்துப் பழகியபிறகே முன்பு சென்றவர்களின் நினைவு சிறிது நீங்குகின்றது.

விழுந்துவிட்டால் அது மிகவும் அபாயகரமானதல்லவா? அவ் வூரில் அவளுடைய சிநேகிதைகள் இரண்டொருவர் இருக்கிறார்கள். அவர்களுடைய உறவால் தான் அவள் சற்று சந்தோஷமாக இருக் கிறாள். இன்னொரு விஷயம் உன்னிடம் கூற மறந்துவிட்டேனே; அவளுடைய பிதாவால் நியமிக்கப்பட்ட காப்பாளிகளில் ஒருவர் இறந்துவிட்டாராம். மற்றொருவர் விலகிக்கொண்டாராம். இப் பொழுது ஒருவர்தான் இருக்கிறார். அவருக்கு இவர்கள் மீது பரம விச்வாசம். அவரே தற்போது அவர்களைக் கவனித்து வரு கிறார். அவருக்கு ஒரு பெண் இருக்கிறதாம். அதையே கோபி நாதனுக்கு விவாகம் செய்துவிட்டால் இப்போதிருக்கும் உரிமை யோடு பாந்தவ்யமும் கலந்துவிடும். பிறகு அநேக சௌக்யங்கள் ஏற்படுமென்று அவர் சொன்னார். நானும் உன் பிதாவும் அதற் கிசைந்தோம். ஆனால் சுலோசனா மட்டும் சற்று தயங்கினாள்; காரணம் என்னவோ தெரியவில்லை.

விமல:—இதற்குள் கல்யாண ஏற்பாடும் ஆய்விட்டதா! சுலோசனாவுக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்வது கூடாது. அவளுக்கு இருப்பதெல்லாம் ஒரு தம்பிதான். ஆகையினால் அந்தக் குழந்தைக்கு சுலோசனாவின் இஷ்ட விரோதமான காரியம் எதை யும் நாம் முன் நின்று செய்வது கூடாது. அவள் எதனால் தயங் கினாளென்பது உங்களுக்குத் தெரியாதல்லவா?

வி....தாயார்:—எனக்குத் தெரியாது. அவள் சதா மனோ வியாகூலமாகவே இருப்பதால், நான் அவளை எந்த விஷயத்தைக் குறித்தும் வற்புறுத்திக் கூற வில்லை—என்றாள்.

இதற்குள் நேரமாகி விட்டதால் எல்லோரும் போஜனத் திற்குச் சென்றார்கள். விமலநாதன் உணவருந்தி உட்கார்ந்திருக்

சங்கீதக் கச்சேரியில் பாடகன் போடும் அற்புதமான சங்கதிகளைக்கூட பிடில் வாசிப்பவன் கற்றுக்கொள்ள முயன்று அதை கிரகித்துவிடுகிறான். பிடில்காரனிடத்தில் பாடகன் ஒரு புதுமாதிரியான சங்கதியை அறிகிறான். இருவரும் சரியாகக் கற்றுப் பழகுவதற்கே கச்சேரி சிலவிடங்களில் அமை கின்றது.

கும் தருணத்தில் நாம் முன்னர் குறித்த பரிமளாவின் கடிதம் கிடைத்தது. உடனே அதை உடைத்துப் படிக்கலானான்.

என் அன்புள்ள பர்த்தாவுக்கு,

அநேக நமஸ்காரம். இங்கு நான், குழந்தை, பெற்றோர் முதலான அனைவரும் க்ஷேமம். அங்கு உங்களுடைய க்ஷேமத்திற்கு எழுத வேண்டுகின்றேன். நீங்கள் ஏன் எனக்குக் கடித மெழுத மனங் கொள்ளவில்லை. உங்களுக்கு என்னினைவே உண்டாவதில்லைபோலும். குழந்தையை யாகிலும் பார்க்க வருவீர்களென்று எண்ணினேன். அதையும் தள்ளி விட்டீர்கள். நான் எப்போது அங்கு வருவது? என்னை எப்போது அழைத்துக்கொண்டு போகப் போகின்றீர்கள். தயவுசெய்து பதிலேனும் போடுங்கள். அதையே எதிர் பார்க்கிறேன்.

இங்ஙனம்
உங்கள் பிரியை,
பரிமளா.

என்ற கடிதத்தைப் படித்தான். கடிதம் எழுதுவதற்குக்கூட நாகரிகமான நடை தெரியவில்லை. ஒரு அன்பான காதற் கடிதம் எழுதுவதற்கும் வகையில்லாத ஒரு மனைவியையா எனக்குக் கடவுள் அளிக்கவேண்டும்? "என் அன்புள்ள பர்த்தாவுக்கு" என்று கர்னாடகமான பழக்கத்தை யனுசரித்து ஒரு கடிதம் எழுதிவிட்டாள். யாவும் நான் செய்த பாக்யம்; குழந்தையைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல்மட்டும் இருக்கின்றது. ஆனால் போவதற்கு மிகவும் மனம் பின்வாங்குவதுடன் வெட்கமாயும் இருக்கின்றது.' ஏன் உன் மனைவியும் குழந்தையும் இன்னும் வரவில்லை? என்று நம்மைப் பார்க்கிறவர்களெல்லோரும் கேட்கிறார்கள். அவர்களும் நாம் அழைத்

ஸ்திரீகளுக்குரிய லக்ஷணங்களும், முகவசீகரமும் ஒரு சிறிதுமற்ற ஆடவர்களுக்கு ஸ்திரீ வேடம் போட்டுச் சில நாடகங்களில் நிற்கவைத்துவிடுகிறார்கள். அந்தக் கண்ராவியைக் கண்டு சகிக்கமுடிகிறதில்லை. இனி நாடகமே பார்க்க வேண்டாம் என்கிற வெறுப்பும் உண்டாகிவிடுகின்றது. பொருத்தமற்ற வேஷம் புலிவேஷம்போலத்தான் தோன்றுகின்றது.

துக்கொண்டு போகாததைப்பற்றி ஏதேனும் வித்தியாசமாக நினைத்திருக்கலாம். ஆகையினால் வீட்டிற்கு அலங்காரமாகக் குழந்தையும் தாயும் இருந்தால் நம்மைக் கேட்பவர்களுக்காவது சற்று சமாதானமாக இருக்குமென்று தனக்குள் எண்ணியவனாய் அக்கடிதத்தைத் தன் தாயினிடத்தில் கொடுத்துவிட்டான். அவன் தாயாரும் அக்கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, பரிமளாவை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்துவிட்டாள்.

பின்னும் சில தினங்களுக்கெல்லாம் பரிமளாவும். குழந்தையும் ஆனந்தவிலாசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். குழந்தை மிக்க சுறு சுறுப்பாயும் அழகாயும் விளையாடிக்கொண்டுமிருந்தது. விமலநாதன் தன் குழந்தையின் இனிய குரலைக்கேட்டு,மெய்மறந்து, ஆனந்தத்தை அடைந்து அதனருகிற்சென்று சிறிது நேரம் நின்று பார்த்து புன்னகை செய்துவிட்டுச் சென்றான். பரிமளாவுடன் அவன் எதுவும் பேசவில்லை. முன்போலவே அவளாக ஏதாவது கேட்டால் பதிலளிப்பான். குழந்தைகள் வீட்டிலிருப்பதே ஓர் மங்களகரமானது; தெய்வத்தைப்போல் கொண்டாடத்தக்கது. "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்; மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" ஆதலால் விமலநாதனின் பெற்றோர்கள் குழந்தையைக் கீழேவிடாது சதாசர்வ காலமும் கைமேல் தாங்கிக் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்து வந்தார்கள்.

* * * * *

இது இங்ஙனமிருக்க, சுலோசனினிடம் உரையாடிக்கொண்டிருந்த அண்ணுசாமி என்பவன், சுலோசனாவின் முகக்குறிப்பால், அவள் மனமாற்றத்தை நன்கறிந்துகொண்டு "சுலோசனா! என்ன இது! ஒருவித மாறுதல் உன் முகத்தில் காணப்படுகின்றதே. என்ன விசேஷம்? அந்த மனிதர் வெகு யோக்யமானவர் என்பது தான் உனது முடிவான அபிப்பிராயமோ?" என்றான்.

எந்த வேஷம் தரித்தாலும் அது மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டால் நாடகத்திற்கு ஓர் அழகைத் தருகின்றது. வேஷம் பொருந்தாதவர்கள் நன்றாகப் பாடி நடிப்பினும் அந்த நாடகம் பிரகாசிப்பதில்லை.

கலோ.—இதுபோல வீண் வார்த்தைகளை இனி நீர் பேச வேண்டாம். உமக்கு இந்த விஷயமாகப் பேசவேண்டிய யாவற்றை யும் எழுதியனுப்பி விடும். அதற்குத்தக்க ஏற்பாட்டை நான் செய் கிறேன். இனிமேல் நீர் அடிக்கடி இங்குவந்து பேசவேண்டாம். எனக்கிது பிடிக்கவில்லை.

அண்ணு.—ஓஹோ! இவ்விதம் பேச ஆரம்பித்துவிட்டாயோ! நான் உனக்கு எதற்காக எழுதியனுப்புவது? உள்ள விஷயத்தை உள்ளவாறு கூறினல் உனக்கு ஏன் இந்த சீற்றம்? இவைகளெல் லாம் கிடக்கட்டும். தற்போது உங்கள் பொருள் பெரும்பாலும் செலவழிந்துவிட்டது. ஆகையால் இனிமேல் அவைகளைப்பற்றி நீ ஏதும் செய்வதோ சொல்வதோ முடியாது. அதற்கெல்லாம் எவ் விதமான ஆதாரமும் கிடையாது. உங்களுடைய சொத்தினுலேயே உங்களிருவருடைய ஜீவனமும் இனி நடைபெற முடியாது. ஆகை யினுல் நான் ஒரு யோசனை கூறுகிறேன். அதாவது, ஒன்று என் பெண்ணை உன் தம்பி கோபிக்குக் கல்யாணம் செய்துவை; இல்லை யேல் எனக்கு சம்சாரம் இறந்துபோய் சரியாக மூன்று வருடங்கள் தாணுகின்றன. இந்த மூன்று வருஷகாலமாக நான் உன்னையே மனதில் எண்ணியிருந்து வருகிறேன். மேலும் நான் விதவா விவாக சபையில் ஒரு அங்கத்தினனுக இருக்கிறேன். இத்தகைய விவாகங் களை ஆதரிப்பதற்கே நான் உழைத்துவருகிறேன். ஆகையினுல் இதை நான் மிகவும் பிரியத்துடனும் ஆவலுடனும் எதிர் பார்க்கி றேன். இதற்கு நீ என்ன பதில் தெரிவிக்கின்ருயென்பதைக் கோரியவனுய் உன் பதிலை ஆவலாய் நம்பி இருக்கிறேன். இவ்விரண் டில் ஒன்று தீர்ந்தாலன்றி நன்மை ஏற்படாது. இதை நிச்சயமாய் நம்பு. சுலோசனு! உடனே விடை யளி" என்று சற்று அதிகார தோரணையுடன் கூறி அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான்.

சில பத்திரிகைளின் வரவை ஆவலோடு நோக்கித் தேதியை எதிர் பார்க்க நேருகின்றது. சில பத்திரிகைகள் தாமாகவே வந்து தேதியை நினைப் பூட்டு கின்றன; பத்திரிகைகளின் ருசிக்கேற்ப அவற்றைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவலும் இருக்கின்றது.

இந்த எரிக்கு நிகரான கொடிய மொழிகளைக் கேட்ட மங்கை நல்லாள் கருநாகத்தை மிதித்தவள் போன்று திடுக்கிட்டு உடல் நடுக்க மெய்தி "ஐயோ! இதென்ன அநியாயம்! அக்கிரமம்!" என்று அடித்தாள். இவ் வதிர்ச்சி தாங்காமல் அப்படியே மயக்கம் வந்து விட்டதால் உட்கார்ந்திருந்த இடத்திலேயே சாய்ந்துவிட்டாள்.

——

7—வது அதிகாரம்

கொள்ளிப் பிசாசின் கள்ள மதி

சுலோசனாவின் கடிதங்களைக் கொண்டு அவளுக்குத் தீங்கிழைக்க நினைத்திருந்த கபடியான காவேரியின் எண்ணம் ஈடேறாமல், மண் விழுந்து அவள் அவமானத்தை அடைந்து விட்டதனால், அன்னிமிடம் முதல் அந்தப் பொறாமை கொண்ட கள்ளி, நமது மங்கையர்க்கரசியின் மீது கடும் பகையும் சினமும் கொண்டு "இந்த சுலோசனாவை எவ்விதமேனும் மற்றொரு கை பார்க்காமலிருப்பதில்லை. அந்த பிரேமாமணியின் உதவியினாலன்றோ அவளுடைய பக்கம் ஜயமாய்விட்டது. ஆகட்டும். மெல்ல ஒரு வழி செய்து இந்த சுலோசனாவின் ஊழல்களைக் கலாசாலையின் அதிகாரிக்குத் தெரியும்படியாகச் செய்து விடுகிறேன். அவளை நான் விடுவதில்லை" என்று மனத்துள்

பெண்களுக்குக் கல்யாணம் செய்யும் முன்னர் மாப்பிள்ளை கிடைக்காத அவஸ்தை. கிடைத்துவிட்டால் சீர் வரிசைகளின் தொல்லை. விவாகம் முடிந்து விட்டபிறகோ அது ஓர் தமாஷ். அவர்கள் கலகம் செய்தார்கள், இவர்கள் கலகம் செய்தார்கள், அதனால் தான் மாப்பிள்ளை முறைக்கிறா ரென்கிற சொல் கிளம்பித் தாண்டவ மாடுகின்றது. எல்லாவற்றையும் விட கலகம் செய்தாலும் செய்யாவிட்டாலும் சொல்லுக்குப் பஞ்சமில்லை.

பெரும் சபதம் செய்துகொண்டு அதற்கான சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

காவேரியின் தந்தை சென்னைக்கு மாற்றப்பட்டு விட்டபடி யால் அவளுடைய எண்ணத்தை நிறைவேற்றும் முன்னரே கடவுள் அவளை அவ்வூரிலிருந்தும் நமது பெண்மணியாகிய சுலோசனாவிட மிருந்தும் பிரித்துவிட்டார். காவேரி தன் கருத்தை நிறைவேற் ருமல் வெளியூருக்குச் செல்ல நேரிட்டதை நோக்கி மிகவும் கவலை யடைந்தவளாய் வாட்ட முற்றுச் சென்னையை அடைந்தாள். சென்னையிலேயே ஓர் பெண் பாடசாலையில் காவேரி சேர்ந்து படித்து வந்தாள். தான் சுலோசனாவை விட்டு வந்தபிறகு அன்று கொண்ட எண்ணத்தை மாற்ருது எவ்வழியில் இதற்கு வேலை செய்தால் தான் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றலாம், என்கிற யோசனை யுடனேயே இருந்தாள்; இவ்விதமே சில கால மாயிற்று.

விமலநாதனுடன் ஆதியில் பள்ளியில் ஓதிவந்த சிநேகிதன் ஒருவன் தனவந்தனில்லையாகையினுல் வறுமையின் கொடுமை யினுல் கலாசாலையில் படிப்பதை நிறுத்திவிட்டான். அவ்வாறு நிறுத்தியவன் வேலைக்காகத் திண்டாடிக்கொண்டே பல விடங்களில் நிலைத்திராத (ஆக்டிங்கு) சொற்பகாலம் வேலை செய்வதும் பிறகு விலகுவதுமாக இருந்து கஷ்டப் பட்டான். விமலநாதன் வக்கில் தொழிலில் நல்ல கீர்த்தியுடன் விளங்கிய பிறகு தனக்கென்று ஒரு குமாஸ்தாவை நியமிக்க நினைத்தான். அப்போது ஆதி நண்பனுகிய வேங்கடம் என்கிறவனின் நினைவு உண்டாகியது. உடனே அவனை வரவழைத்துத் தனது குமாஸ்தாவாக நியமித்துக்கொண்டான்.

ஒரே வீட்டிலுள்ள குடித்தனக்காரர்கள் ஒருவர் மீதொருவர் மனஸ்தாபப் படுவதும், அதனுல் திட்டும் வசையும் நேருவதும், வீட்டைவிட்டு விரட்டு வதும், வீட்டுக்காரர்களுக்கு ஒருவித சம்பந்தமு மில்லாமல் சகஜமாய் இருப்பதும் இவைகளெல்லாம் ஒரு தனித்த வேடிக்கை.

புதிய சந்தா நேயர்கட்கு
ஒரு முக்கிய அறிவிப்பு

இவ்வாண்டின் 6-வது சஞ்சிகையில் முடிவடைந்த சாருலோசன வின் தனி இதழ்கள் நமது கைவசமில்லாதபடியால், இப்போது புதிதாகச் சேர்பவர்களுக்கு முதல் சஞ்சிகையிலிருந்து அனுப்ப முடியாதிருப்பது பற்றி வருந்துகிறோம்.

சாமளநாதன் (7-வது இதழ்) ஆரம்பத்திலிருந்து தான் புது சந்தா நேயர்களைச் சேர்த்துக்கொள்கிறோமாதலால் இவ்வாண்டின் 6 சஞ்சிகைகளுக்காக அணா 12 அனுப்பக் கோருகிறோம்.

புதிய ஆண்டின் ஆரம்பத்திற்கு இன்னும் இரண்டு மாதங்களேயிருப்பதால் அதன் வருஷ சந்தா ரூ 1—8—0 யும் இதோடு சேர்த்தனுப்பினால் புது சந்தா நேயர்கட்கு தபாற் செலவு மிகுதியாகு மென்பதைத் தெரிவிக்கின்றோம்.

மானேஜர்.

—::—

பரிசுகளின் விவரம்.

7-8-வது சஞ்சிகைக்குப் பிறகு இம்மாத சஞ்சிகை வெளியாவதற்குள் சந்தாவுக்காகவும், "சுகந்தபுஷ்பம்", "வீரவஸந்தா" இரண்டிற்காகவும் பணமனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு ந.	ரூ.	சந்தா ந.
1	5	M. S. Muthukrishna Iyengar, Sirugamani
2	5	S. Y. Swami Iyer, Palghat.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களின் நம்பர்களையும் "சுகந்தபுஷ்பம்", "வீரவஸந்தா" இரண்டிற்கும் பணமனுப்புவோரின் நம்பர்களையும் குலுக்கிப்போட்டு 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

அதியற்புதமான பன்னிரண்டு

நாவல்களின் களஞ்சியம்

"பன்னிரு மரகதங்களின் மர்மம்" என்ற நூல் 12 அபூர்வமான நாவல்களின் களஞ்சியமாகும். 'பிரஜானுகூலன்' நேயர் ஆநந்தத்துடன் வாசிக்கத் தருந்தது. இதிலுள்ள நாவல்களின் விவரம்.—(1) மோகனராமன், (2) சாணக்கிய தந்திரம், (3) மாலதீ மாதவம், (4) கிராதார்ஜுனீயம், (1) அதிர்ஷ்ட உருமால், (6) ஜோதிஷ்மதி, (7) சந்திரா, (8) சிங்காரத்தின் காதல், (9) மோஹன கல்யாணி, (10) கொடுத்தும் கெட்ட பெயர், (11) திக்கற்ற இரு பெண்மணிகள், (12) மாமனார் மாறிய விசித்திரம். இந்த ஒவ்வொரு நாவலும் மிக்க அருமையானவை. இத்துடன் (1) சிநேக அனுபவங்கள், (2) உலக அனுபவங்கள், (3) வடமொழித் திரட்டு, (4) நீதிலதா, (5) ஆங்கிலப் பழமொழிகள், (6) பிரபஞ்ச விலாசம், (7) மாதங்களைப் பற்றி, (8) கடிதங்களின் ரகசியம், ஆக வேறு எட்டு விஷயங்களும் கண்டறிந்து அனுபவமாய் எழுதப்பட்டிருக்கிறன. 650 பக்கங்கள் கொண்டது. **விலை ரூபா 3.** உடனே எழுதுங்கள்,

இந்நாவல் "பிரஜாநுகூலன்" பத்திராதிபர் இயற்றியது, ஒவ்வொரு பக்கமும் அநுபவங்களும், நீதிகளும், உயரிய கற்பனைகளும் நிறைந்து வசீகரிக்கின்றது. இது ஒரு குடும்ப பொக்கிஷமாகும். எல்லாம் புதிய போதனைகளாகும்.

பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

அகில இந்திய லா ஜர்னல்

ஓர் உயரிய மாதாந்திர சட்டப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஹிந்துலா, பீனல்கோட், காண்ட்ராக்ட் ஆக்ட் (ஜமீன் ஜமீன்தார்கள் சம்பந்தமான) எஸ்டேட் லாண்டு ஆக்டு, சிவில் புரோசிஜர்கோட் (விக்ரயம், அடமானம், தானம் முதலிய விஷயங்களைப்பற்றின) டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டு, (உண்டி, செக். புரோநோட் இவை சம்பந்தமான) நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட் முதலிய ஆக்டுகளின்கீழ் ப்ரீவிகௌன்சில், சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன், அலஹபாத், லாகூர் முதலிய ஹைகோர்ட்டுகளில் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் அவைகளின் சாராம்சங்களும், தெளிவான தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சட்ட வியாசங்களுடன் வெளியாகி வருகின்றன. இப்பத்திரிகை ஜமீன்தார்கள், வியாபாரிகள், வக்கீல் குமாஸ்தாக்கள், கொடுக்கல் வாங்கல் வர்த்தகர்கள், பெடிஷன் எழுதுவோர் முதலிய வியாபாரஸ்தர்களுக்கு வெகு அவசியமானது. சட்ட விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். இப்பத்திரிகை மாதம் 1க்கு 64 பக்கங்களுக்குமேல் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. வக்கீல்களால் இயற்றப்பட்டு வருகின்றது. முதல் வால்யம் 1929-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் ஆரம்பித்து வெளிவருகின்றது. சந்தாவிவரம், இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷசந்தா (முன்பணம்) தபால் சார்ஜ் உள்பட ரூ. 5. மற்ற இடங்களுக்கு 5.12.0. (ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தா கிடையாது) ஒரு வருஷத்திற்கு ஒரு வால்யம் முடியும். மாதிரி சஞ்சிகை 0—8—0 ஸ்டாம்புகளனுப்பினால், அனுப்பப்படும். மானேஜர்

அகில இந்திய லா ஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர் செங்கல்பட்டு ஜில்லா.

(M. & S. M. Ry.)

நியூ இந்தியா

அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

வட ஆற்காடு, தென்னாற்காடு, நீலகிரீஸ்,
செங்கல்பட்டு, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கு
செல்வாக்கும், ஊக்கமும் வாய்ந்த ஏஜெண்டுகள்
உடனே தேவை.

லைப் இலாகாவில் கம்பெனி அளிக்கும் வசதிகளாவன:—

பாலிஸிதார்களுக்கு:—

[1] தானாகவே கிடைக்கும் பறிமுதல் செய்யப்படாத உரிமை, [2] நீடித்த கால அஷியூரன்ஸ், [8] கஷ்டகாலத்துக்கான சாசுவத அனுகூலங்கள், [4] எதிர்பாராத சம்பவத்தால் மரணமேற்படுவதற்கு இரண்டு பங்கு தொகை அளிக்க உறுதி கூறப்படுவது, [5] ராஜீயக் குற்றத்துக்காகச் சிறை செல்லும் பாலிஸிதாரர்களுக்கு அவர்கள் சிறையிலுள்ள வரையில் பிரத்யேக ஏற்பாடுகள்.

ஏஜண்டுகளுக்கு:—

[1] தாராளமான கமிஷனும், போனஸும், [2] மீண்டும் தொடங்கப்படுவதற்குச் சாசுவதமான கமிஷன், [3] கம்பெனியுடன் நேரான சம்பந்தம்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்.

4—5, முதல் லைன் பீச்,
மதராஸ். 26-9-30

210025

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும், பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 x 2¼ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 x 2¼ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தங்கிக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 x 2¼ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சாக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஏஜண்டுகள் தேவை.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜீ. டி. சென்னை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

" ஜகன்மோகினி " யில்

வெளிவந்த நாவல்கள்.

மலர் 1.	ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய				
	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை				
	கனகசபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன் —	ரூ.	1	8	0

" ஜகன்மோகினி " ஆபீஸ்

26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்" "ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனு[illegible]டும்.

[illegible]ழ் நாவல்கள்

மதனசிங்கர்	ரூ.	1	0	0.	மர்மமுகி	ரூ.	0	12	0
சுந்தரவதனி	ரூ.	0	12	0	வஸந்தசமுத்ரம்	ரூ.	0	12	0
மஞ்சுளா	ரூ.	0	6	0	அமிருதமாலினி	ரூ.	0	4	0

வத்[illegible]ம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து

அமிர்தாஞ்ச[illegible] டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.